விலை: 20/=

நமது
# முரசொலி

செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்

නමදු මුරසොලි Namathu Murasoly


வார இதழ்

முரசு - 01 (04.10.2013 - 10.10.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 06

## இரணைமடுவும் தமிழர் எதிர்காலமும்..!?

## இராஜதந்திரப் போர்க்களம் தமிழர்களுக்கு புதியதா?

## வைத்தியர்களுக்கு வந்த வருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவை நாளும் விளையவே உண்மையை நேர்மையாய் ஒலிக்கும் நமது முரசொலி

# இரணைமடுவும் தமிழர் எதிர்காலமும்

கிளிநொச்சி மாவட்டம் விவசாயிகளின் சொத்து. அதில் இரணைமடு விவசாயிகளின் சொர்க்காபுரி. பண்டைய காலம் தொட்டு கிளிநொச்சி ஒரு விவசாய மாவட்டமாகவே காணப்படுகிறது. இயற்கையுடன் கூடிய நிலவளம் மற்றும் நீர்வளம் அதற்குச் சான்று. இவற்றில் இரணைமடுக் குளம் இயற்கை அண்ணை தந்த கொடை.

யாழ்ப்பாணத்திற்கு நெல்லை வழங்கிய வளமான இவ் இரணைமடுக்குளம் வருங்காலத்தில் நீரையும் வழங்கவுள்ளதாக செய்தி வருகின்றது. இதற்காகக் குளம் மேலும் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதால் விவசாய அபிவிருத்தியும் அதிகரிக்கும் என்றும் மேட்டுநில பயிர்ச்செய்கையிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டுவர் என்றும் சொல்லப்படுகின்றது. இதே சமயம் குளம் உயர்த்தப்பட இருப்பதால் கொள்ளளவு கூடும் போது நன்னீர் மீன்பிடித் தொழிலும் வளர்ச்சியடையும் எனவும் இன்று வரை தூர்ந்து போயுள்ள வாய்க்கால்கள் கட்டுகள் கழிவுஆறு மற்றும் கழிவு வாய்க்கால்கள் விவசாய வீதிகள் என்பனவும் சேர்ந்து அபிவிருத்தி அடையும் என்றும் கூறப்படுகையில், இரணைமடு நீரின் யாழ் நோக்கிய பயணத்தின் மூலம் நன்மை கிடைக்க இருப்பது ஒருபுறம் மகிழ்ச்சிதான்.

இவை எல்லாமே யாழ்ப்பாணம் நீர் கொண்டு போவதற்காகச் செய்யப்படும் அபிவிருத்தியே அன்றி இரணைமடுவை கிளிநொச்சி மக்களுக்காக அபிவிருத்தி செய்துவிட்டு பின்னர் யாழ்ப்பாணம் நீர் கொண்டு செல்வது தொடர்பாக யாரும் கதைக்கவில்லையே!

ஆகையால் இவ்விடயம் தொடர்பாக நாம் சற்று ஆராய வேண்யது மிகவும் அவசியமான ஒன்றாகவே கருத வேண்டியுள்ளது.

கடந்த பத்து வருடங்களை உற்றுநோக்கும் போது இன்றைய காலநிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளது. வெளிப்படை உண்மையை இதனடிப்படையில் பார்ப்போமேயானால் இன்று உலகளவில் பெரும் பிரச்சினை வடதென் துருவங்களில் பனிக்கட்டிகள் உருகிவரும் அளவுக்கு வெப்பநிலை அதிகரித்துள்ளமை. இதே போல் பருவப் பெயர்ச்சி மழைகளில் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளமை. இன்று இலங்கையைப் பொறுத்தமட்டில் இரண்டாவது விடயமான பருவ பெயர்ச்சி மழை பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் எமது விவசாய முறை பருவ மழை வீழ்ச்சிகளின் போக்கில் பெருமளவு தங்கியுள்ளது. காலபோக விவசாயத்தைப் பொறுத்தமட்டில் மழை காலம் ஆரம்பிக்கும் காலங்களி லேயே உழத் தொடங்கி மழை காலம் முடியும் தருவாயில் அறுவடை செய்யும் அளவுக்கு முற்றுமுழுதாக மழையினை நம்பி செய்யப்படுவது அவ்வாறே சிறுபோகமும் "சித்திரை சிறு மழையுடன்" தொடங்கி "ஆடி குழப்பம்" எனப்படும் ஆடி மழையுடன் குளத்தில் உள்ள நீரினை பொறுத்து குளத்தை பெருமளவில் நம்பி மழை காலத்திற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் தற்போது காலபோகத்தில் மழை குறுகிய காலத்தில் அதிகளவில் பெய்து காலபோகத்தையே அழிக்கின்றது.

தென்பகுதிக் குளங்களை நாம் பார்ப்போமேயானால் அவற்றில் ஏராளமானவை மகாவலி ஆற்றினால் நீர் ஊட்டப்படுகின்ற குளங்கள் ஆகையால் அக் குளங்களினால் இருபோகம் அன்றி மூன்று போகம் குளங்களின் கீழ் வரும் முழு ஏக்கர் நிலமும் பயிர் செய்வதற்கு நீர் வழங்க முடியும். ஆனால் எமது வடமாகாணத்திலேயே பாரிய குளங்களின் ஒன்றான இரணைமடுவில் பருவ மழை பெய்யும் போது தேக்கி வைக்க முடிகின்ற நீரின் அளவை பொறுத்தே சிறுபோக செய்கை அளவு தீர்மானிக்கப்படும். குளத்தில் பருவ மழையின் போது தேக்கப்படும் நீரின் அளவு குறையும் போது செய்கை பண்ணும் விஸ்தீரணமும் குறைவடையும்.

தென்பகுதி குளங்களில் குடிநீருக்கு நீர் எடுக்கும் போது எதுவிதமான பிரச்சினையும் உருவாக சந்தர்ப்பம் இல்லை. ஏனெனில் வருடந்தோறும் வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் மகாவலி ஆற்றினால் அவை நிரப்பப்படுகின்றன. இதனால் விவசாயம் பாதிக்கப்பட மாட்டாது. ஆனால் இரணைமடுக்குளத்தில் ???

**"ஒன்றுபட்டிருக்கும் ஓர் தேசம் தண்ணீருக்காப் பிரிந்து நின்று மோதிக்கொள்ளும் ஓர் ஆபத்து உள்ளதென்பது உங்களுக்கு சற்றேனும் புரிகின்றதா..?"**

**- பார்த்தீபன் -**



கிளிநொச்சிக்கு வருகை தந்த மத்திய அமைச்சர்களில் முதல் அனைவரும் கூறுவது இரணைமடுவுக்கு மகாவலி ஆற்றினை திருப்பி நீர் வழங்கப் போவதாகவும் இதனால் இரணைமடுவில் நீருக்குத் தட்டுப்பாடே ஏற்படாது என்பதாகும். மிக்க மகிழ்ச்சி! ஆனால் இது தொடர்பான சில விடயங்களை நாம் ஆராய்வோமானால்...

வடமத்திய மாகாணம் வரை வரவுள்ள மகாவலி ஆற்றினை வடக்கு மாகாணத்தில் உள்ள இரணைமடுக்குளம் வரை கொண்டு வருவதற்கு எவ்வளவு பிரதேசங்களையும், குளங்களையும் கடந்தாக வேண்டும். இப்பிரதேசங்களின் நீர்த் தேவைகளை பூர்த்தி செய்த பின்பே மேலதிக நீர் இரணைமடுவை வந்தடைய வேண்டும். நீர் முகாமைத்துவ வல்லுநர்களின் கருத்துப்படி மகாவலியிலிருந்து இரணைமடுவிற்கு நீர் கொண்டு வருவது என்பது பலவீனமானதொரு யோசனையே. ஏனெனில் மகாவலியில் இத்தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு நீர் வளம் இல்லை என்பதாகும்.

இவற்றை விட நாம் மகாவலி நீர் இரணைமடுவை வந்தடைந்ததாகவே கருதிப் பார்ப்போமேயானால், சில வேளைகளில் நாட்டில் வறட்சி ஏற்படுமாயின் (2012 ஆம் ஆண்டு போன்று) தென்பகுதி மக்களின் அல்லது விவசாயிகளின் நீர்த் தேவையை மகாவலியினால் பூர்த்தி செய்ய முடியாது போனால்!! தென்பகுதி மக்களின் அல்லது விவசாயிகளின் மனநிலை எவ்வாறு இருக்கும்... சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். ஏற்கனவே இனப்பிரச்சினையில் வெந்து போயிருக்கும் தென்பகுதி – வடபகுதி மக்கள் அந்த நேரத்தில் என்ன முடிவெடுப்பார்கள்?

இவற்றினை விட மகாவலி இரணைமடு வருமாயின், இரணைமடுக்குளம் முதல் மகாவலி வரும் பிரதேசங்கள் மகாவலி அதிகார சபையின் வசமாகும் எனும் விடயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். மகாவலி அதிகார சபைக்கு மக்களைக் குடியேற்ற – குடியகற்ற அதிகாரம் உண்டு. ஆகையால் இரணைமடுவின் நீரேந்து பிரதேசமான கனகராயன் ஆறும் அதனோடு இணைந்த ஆற்றங்கரைப் பிரதேசங்களும் சிங்களக் குடியேற்றத்திற்கு வித்திடும். இதற்கு முன்னேற்பாடாக முறிகண்டி முதல் ஓமந்தை பிரதேசம் வரை ஏ9 வீதியின் கிழக்கு பக்கமாக இராணுவ ஏற்பாட்டில் மேற்கொள்ளப் பட்டுவரும் குடியிருப்புக்கள் உதாரணமாகும. ஆகையால் மக்களே சொல்லுங்கள் மகாவலி வடக்குக்கு வருமா?... இது தேவையும் தானா?

அதுமட்டுமன்றி, இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து அனுமதி பெறப்படுத்தல் சட்டத்தின் தேவைப்பாடாகவுள்ளது. இரணைமடுத் திட்டம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்ட சூழல் மதிப்பீட்டுத் தாக்க அறிக்கை மிகமுக்கியமானதாகும். அத்தகைய ஆய்வொன்று எவ்வாறு நடத்தப்பட்டது? அதில் மக்களுக்கு கருத்துத் தெரிவிப்பதற்கு எவ்வாறு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டது. அவ்வறிக்கையில் எத்தகைய சுற்றாடல் தாக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பு பற்றி நாம் ஆராய்தல் வேண்டும்.

இத்திட்டம் உண்மையில் இப்பிரதேசத்தைச் சார்ந்தவர்களிடம் முறையாகக் கருத்து உள்வாங்கப்பட்டு வடிவமைக்கப்பட்டதொன்றல்ல. மாறாக மேலிடத்து முடிவுகளே இத்திட்டத்தைத் தீர்மாணித்துள்ளன. இத்தகையதொரு திட்டத்திற்கு மக்களிடமிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. எத்தனையோ திட்டங்கள் மக்களால் கோரிக்கை விடப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்டும் இன்னமும் அதற்கான திட்ட முன்மொழிவுகள் இல்லாதிருக்கும்போது இரணைமடுத் திட்டத்தை மாத்திரம் ஏன் அரசாங்கம் இவ்வளவு விரைவாகவும் முனைப்புடன் செயற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

உண்மையில், இத்திட்டம்தான் யாழ்ப்பாணத்திற்குக் குடிநீரைக் கொண்டுவருவதற்கான மிகச்சிறந்ததொரு முடிவோ, தனியொரு மாற்றுவழியோவல்ல. பல்வேறு மாற்றுத் திட்டங்ள் இருந்தும் ஏன் கிளிநொச்சியில் இருந்து நீரைக் கொண்டுவர வேண்டும் என்று திட்டம் வகுத்திருக்க வேண்டும். சற்றுச் சிந்தித்துத்தான் பார்ப்போமே...?

இந்தியாவின் கேரள – தமிழ்நாடு மாநிலங்கள் தண்ணீருக்காக எவ்வாறு ஒன்றையொன்று அடித்துக்கொள்ளுகின்றதோ, அதுபோன்று தண்ணீர் பங்கீடு தொடர்பில் நாளை கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களுக்கிடையே பிரச்சினை தோன்றும்பொழுது, ஒன்றுபட்டிருக்கும் ஓர் தேசம் தண்ணீருக்காப் பிரிந்து நின்று மோதிக்கொள்ளும் ஓர் ஆபத்து உள்ளதென்பது உங்களுக்கு சற்றேனும் புரிகின்றதா. அந்த ஆபத்து பற்றி அடுத்த வாரம் விரிவாக ஆராயலாம்.

*(இரணைமடு தொடர்ந்தும் பாயும்...)*

---

**தமிழன் வரலாற்றின் தலை நிமிர்வு இரணைமடு**

ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில் இரணைமடு படுகையில் கனடா-பிரித்தானிய அதிகாரியான சேர் ஹென்றி பாட் 1885 இல் அப்போதைய பிரித்தானிய அரச அதிபர் டேக்கிற்கு இரணைமடு நீர்த்தேக்கத்தை அமைக்கும் ஆலோசனையை முன் வைத்தார். 1866 இல் பிரித்தானிய நீர்ப்பாசன பொறியிலாளரும் தொல்பொருள் தேடலாளருமான ஹென்றி பாக்கர் என்பவர் இரணைமடு நீர்த்தேக்கத்துக்கான திட்டத்தை வரைந்தார். அவரின் திட்டத்தில் இரணைமடுவின்கீழ் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது. 1900 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன பிரித்தானியப் பொறியிலாளர் பிரவுன் வரும்வரை இரணைமடு கட்டுமானம் வரைவு மட்டத்திலேயே இருந்தது. பொறியிலாளர் பிரவுன் அப்போதிருந்த கரைச்சிப் பகுதியில் வாழ்ந்த வெற்றிவேலு என்பவரைச் சந்தித்து இரணைமடு படுகை காட்டை முழுமையாக ஆராய்ந்தார்.

இரணைமடு கட்டுமானத்தை மேற்கொள்ள பெரும் மனிதவலு வேண்டும் என்பதற்காக ஒரு குடியிருப்பை நிறுவும் முயற்சியில் முதலில் பிரவுன் ஈடுபட்டார். இவர் தற்போதுள்ள கிளிநொச்சி நகரிலுள்ள 'ரை' ஆறு குளம் என்ற தேக்கத்தை உருவாக்கி அதன் கீழ் மக்கள் குடியிருப்பை உருவாக்கினார். இந்த 'ரை' ஆறு குடியிருப்பு குஞ்சுப்பரந்தன் மக்களைக் கொண்டே இரணைமடு கட்டுமானம் ஈழத்தமிழரின் முழுமையான வியர்வையால் கட்டப்படத் தொடங்கியது 1902 இல் ஆகும்.

1920 இல் 19 லட்சத்து 4 ஆயிரம் ரூபா செலவில் இரணைமடு முதல் கட்டமாக முழுமையாக்கப் பட்டது. அப்போது இரணைமடுவின் கொள்ளளவு 44 ஆயிரம் ஏக்கர் அடி. ஆழம் 22 அடி. 1954ல் இரண்டாம் கட்டக் கொள்ளளவு அதிகரிப்பு நடைபெற்றது. அப்போது கொள்ளளவு 82 ஆயிரம் ஏக்கர் அடியாகும். இதன்மூலம் குளத்தின் நீர்மட்ட ஆழம் 30 அடியாக உயர்த்தப்பட்டது. 3 ஆம் கட்டமாக கொள்ளளவு அதிகரிப்பு 1975ல் நடைபெற்றது. 1977ல் முழுமையடைந்த அக்கொள்ளளவு அதிகரிப்பின்போது இரணைமடுவின் கொள்ளளவு 1 லட்சத்து 6500 ஏக்கார் அடியாக அதிகமானது. ஆழம் 34 அடியாகும்.

1977 இல் முடிவடைந்த இந்தப்பணிக்குப்பின் இரணைமடு முழுப் புனரமைப்புக்கு இதுவரை உட்படுத்தப்படவில்லை. 1977ல் தான் இப்போதுள்ள வான் கதவுகள் கொண்ட தோற்றத்தை இரணைமடு பெற்றது. 227 சதுரமைல்கள் நீரேந்து பரப்புக்கொண்ட இரணைமடு கனகராயன் ஆறு, கரமாரி ஆறு என இரு ஆறுகளின் மூலம் நீரைப் பெறுகின்றது. 9 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இதன் அணை 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இதன்மூலம் 20 882 ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெற்றுள்ளது. மொத்தம் 32.5 மைல்கள் நீள வாய்க்கால்கள் மூலம் இரணைமடு கிளிநொச்சியை வளப்படுத்துகின்றது. இரணைமடு மூலமே கிளிநொச்சியில் பெருமளவில் குடியேற்றங்கள் நடந்தன.

இடதுகரை வலதுகரை என இரு வாய்க்கால்களைக் கொண்ட இரணைமடுவின் வலதுகரையில் ஊரியான்குளம் அதன் ஊட்டக்குளமாக உள்ளது. இடதுகரையில் ஊட்டக்குளமாக கிளிநொச்சிக்குளம் அல்லது ரை ஆறு குளம் உள்ளது. இதிலிருந்துதான் கிளிநொச்சி நகருக்கான குடிநீர் வழங்கல் முன்னர் நடைபெற்றது. இதைவிட திருவையாறு என்ற மேட்டுநீர்பாசன குடியிருப்பு பயிர்செய் நிலங்களுக்கான ஏற்றுப்பாசன பம்பி இடது கரையில் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது முரசொலி
வார இதழ்
Namathu Murasoly 06

இல.: 18/1, இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்.
E-mail : namathumurasoli@gmail.com, Tel : 0773673829

# தளபதியும் அமைச்சர்களும்

நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தலில் மக்கள் இலகுவாக மிகத் தெளிவாக ஒரு முடிவை எடுத்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்தபோதும், கூட்டமைப்புத் தலைவர்கள் மீண்டும் முடிவெடுப்பதில் தமக்குள்ள பலவீனங்களைத் தொடர்ந்து வருகின்றனர். முதலமைச்சர் வேட்பாளரை முடிவு செய்வதில் ஆரம்பித்த இழுபறி இன்று அமைச்சர்களை நியமிப்பது வரை தொடர்கின்றது. அதுபோன்றே மக்கள் அளித்த வாக்கில் கிடைத்த மேலதிக இரண்டு ஆசனங்களையும் யாருக்கு கொடுப்பது என்பது தொடர்பில் கூட அவர்களின் முடிவெடுக்கும் வல்லமையின் நீட்சி தெரிந்திருக்கின்றது. மேலதிக ஆசனத்துக்காக முன்னரே ஒரு ஒப்பந்தத்தை பகிரங்கமாக கைச்சாத்திட்ட நிலையிலும் அது பின்னர் மீறப்படலாம் எனச் சிந்திக்க வைக்கும் விதத்தில் மேலதிக ஆசனப்பங்கீடு இழுபட்டு முடிவுக்கு வந்திருக்கின்றது.

இவ் ஆசிரிய தலையங்கத்தை எழுதும் வரை மாகாண அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் எந்த இணக்கமான முடிவுகளும் எட்டப்படவில்லை. இது ஒன்றுதிரண்டு கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இரவுபகலாய் உழைத்த தேசிய உணர்வுமிக்க இளைஞர்கள் மத்தியிலும் பல அதிருப்திகளை தோற்றுவித்துள்ளது. இவ் அதிருப்திகள் நீடிக்கும் ஆனால் மீளச் சுழலும் வரலாற்றுச் சக்கரத்தில் சில விரும்பத்தகாத முடிவுகள் ஏற்பட வழிசெய்துவிடலாம் என்பது முரசொலியின் அச்சமாகும்.

1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பிரகாரம் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் நின்ற போது பேரலையாகத் திரன்ற மக்கள் அளித்த பேராதரவு அமிர்தலிங்கம் அவர்களை வரலாற்றில் ஒருதடவை நாடாளுமன்றத்தில் எதிர்கட்சித்தலைவராக்கி பெருமை கொண்டது. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானதும் தளபதி அமிர்தலிங்கமாகவும் தானைத் தளபதி அமீராகவும் உருமாற்றம் பெற்று தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கனதியான ஆளுமை எனும் அதிர்வினை ஏற்படுத்தினார். 1977 தனிநாட்டுக்கான தேர்தல் தளபதியை உருவாக்கியது போல 2013 மாகாணசபைக்கான தேர்தல் அமைச்சர்களை உருவாக்கியிருக்கின்றது.

1977 இல் தனிநாட்டுக்காய் வாக்களித்த மக்களும் அதற்காய் அமிருக்காய் உழைத்த இளைஞர்களும் அமிர் தனிநாடு காண்பார் எனக் காத்திருந்து களைத்துப்போனார்கள். கடைசியில் தமிழீழம் தொடர்பில் அமீரிடம் இளைஞர்கள் கேட்டபோது "தமிழீழம் என்ன கடையில் விற்கும் இனிப்பா கொழும்பிலிருந்து வரும்போது வாங்கிவர" என இளைஞர்களிடம் எதிர்க் கேள்வி தொடுத்தார். இதன் விளைவு தளபதியின் சாவு தவிர்க்கமுடியாமல் தனது சிப்பாய்களினாலேயே நிகழ்ந்தேறியது.

இன்றும் சம்பந்தன் ஐயா சொல்வது போல, 77 தேர்தலைவிட இந்தத் தேர்தல் இன்னும் கனதியானது எனில், அதற்குச் சமாந்தரமாக இளைஞர்களின் எழுச்சியும் காத்திரமானதே. ஆனால் அன்றைக்கு அமிர் தளபதியானது போல் இன்று சிலர் அமைச்சராக அடிபிடிப்படுவது கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைத்த இளைஞர்கள் மத்தியிலும் வாக்களித்த மக்களுள் பெரும்பாலானவர்கள் இடையேயும் சலசலப்புக்களை உண்டு பண்ணி கூட்டமைப்பு தொடர்பான நம்பிக்கை யீனங்களை விதைத்து வருகின்றது. இதனை நீடிக்க விடுவது என்பது அமைச்சர்களுக்கும் பின்னர், அவர்களின் பிரதானிகளுக்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவித்து வரலாற்றுச் சக்கரத்தை மீள ஒருடவை வலிந்து சுழற்றிப்பார்க்கும் விசப்பரீட்சையாக அமைந்துவிடும்.

மாவட்டத்துக்கு ஒன்று கட்சிக்கு ஒன்று என ஆசனப்பங்கீடுகள் போல் அமைச்சுக்களை பங்கீடுவது எவ்வளவு தூரம் மாகாண சபை நிர்வாக இயந்திரத்தை இயக்கப் பொருத்தமானது என்பதை முடிவெடுக்கும் அதிகாரமிக்கவர்கள் உணரவேண்டும். மக்கள் தெளிவாக எடுத்து தந்த முடிவுகளைப் புறந்தள்ளி தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்காக கூட்டமைப்பை மலினப்படுத்தி முடிவுகளை எடுக்கவிழைவது, எதிர்காலத்தில் மக்கள் மாற்றுத் தெரிவுகளையும் முடிகளை எடுப்பதற்கும் வேறு தலைமைகளைத் தெரிவுசெய்யவும் வழிசெய்துவிடும்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஐயா சொல்வதைப் போல, திறன்மிக்கவர்க
ளுக்கு அமைச்சுக்களை வழங்குவது சிறிதாயினும் அரிதாக கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவலப்பட்ட இனத்துக்கும் மண்ணுக்கும் எதேனும் நல்லது செய்ய வழிசெய்யும். அது தமிழ்மக்களுக்கும் கூட்டமைப்பில் உள்ள நம்பிக்கையை இன்னும் வலிதாக்கி, சாதாரண மக்களும் தமிழ்த்தேசிய அரசியல்மயப்படலை வலுவாக அதிகரிக்கும். பிளேட்டோ சொன்னது போல அறிவாளிகள் நாட்டை ஆள வேண்டும். இந்த ஆசிரிய தலையங்கத்தை நீங்கள் வாசிக்கும் போது அமைச்சுக்கள் வழங்கப்பட்டிருந்தால் அமைச்சர்களை வைத்துக்கொண்டு கூட்டமைப்பின் எதிர்கால அரசியல் செல்நெறியை நீங்கள் உணரக்கூடியதாகவிருக்கும். எது எவ்வாறெனினும் தளபதியாக்கி அழகு பார்த்த இனம், தளபதி வீழ்ந்த போது கிளர்ந்தெழுந்து எதுவும் செய்யவில்லை. அதுபோன்றே அமைச்சர்களுக்கும் ஜனநாயக வழியிலோ அல்லது காலம் தீர்மானிக்கும் வடிவிலோ ஏதேனும் நிகழலாம். சத்தமின்றி அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்படலாம். செல்லும் பாதை மிகக் கடினம். இதை உணர்ந்து பயணிப்பது ஒட்டுமொத்த தமிழர்களினதும் எதிர்காலத்துக்கும் நன்மை பயக்கத்தக்கதாகும். பயங்களை விலக்கி அச்சங்களை அகற்றி வெற்றிக்காய் உழைத்தவர்கள் ஏமாற்றப்பட்டால் அவர்களின் விம்மலும் விசும்பலும் கோபமும் மகத்தான மாற்றங்களை இலகுவில் விளைவித்துவிடும்.

மக்கள் சத்தி மாபெரும் சத்தி

# இராஜதந்திரப் போர் தமிழர்களுக்குப் புதிதல்லவே.

வளவன்

உலக இராஜதந்திரக்களம் எப்போதும் தமிழர்களுக்கு சார்பானதாகவோ, அல்லது தமிழர்கள் மீதான அனுதாபமிக்கதாகவோ இருந்தது எனக் கொள்ளமுடியாது. அது போலவே அது எல்லாவேளைகளிலும் தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்தது என்றும் கருத முடியாது. தமிழர்கள் மீது கரிசனையும் அனுதாபமும் கொண்டதாக உலக அரசியல் - இராஜதந்திரக் களம் தோற்றமளித்த சந்தர்ப்பங்களை மீள்வாசிப்புச் செய்தல் இன்றைய களநிலைமையின் கனதியையும், காலம் கையளித்துள்ள கடமையையும் உணர உதவும். போருக்குப் பிந்திய இந்தக் காலகட்டத்தில், ஈழத் தமிழர்கள் அரசியலில் எதைச் சாதித்தனர், எதைச் சாதிக்கப் போகின்றனர், ஈழத்தமிழரின் இலக்கை அடையும் முயற்சிகள் சரியான திசையில் செல்கின்றனவா என்று ஒரு மதிப்பீட்டை செய்வதற்கு இது பொருத்தமானதாக இருக்கும்.

ஈழத்தமிழர் தொடர்பான உலக அரசியல் பற்றிப் பேசுமிடமெங்கும் இந்தியாவைப்பற்றிப் பேசாமல் அப்பால் நகர முடியாது. இலங்கைத்தமிழர் தொடர்பான இந்திய நிலைப்பாடு தொடர்பில் 1990களுக்கு முன் இந்தியா எப்போதும் ஈழத்தமிழருக்கு ஆதரவாகச் செயல்பட்டது போலவும், ராஜீவ்காந்தியின் மரணத்தின் பின்பாகவே நிலைமை எதிராக மாற்றமடைந்தது போலவும் ஒரு உண்மையற்ற எண்ணக்கரு பல அரசியல் சிந்தனையாளர்களால் எடுத்தாளப்படுவது வேதனையானது. ஈழப்போராட்டத்தின் திசை வழியொன்று அடைபட்டது புலிகளின் இராஜீய அணுகுமுறையின் தோல்வியினால்தான் என தொடர்களை எழுதுகின்ற ஆய்வாளர்கள் கடந்தகாலத்தை வசதிக்காக மறந்துவிடுகின்றனர். ஆயுதப்போராட்டம் தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே இந்தியாவினால் பல சந்தர்ப்பங்களில் ஈழத்தமிழர் நலன் மட்டுமன்றி இந்தியத்தமிழரின் நலன்களும் புறக்கணிக்கப்பட்டது என்ற யதார்த்தத்தைப் புறக்கணிக்கும் அபத்தமான அரசியல் ஆய்வுகள் பொருத்தமான செல்திசையைக் காட்டவோ, கடந்த காலத்தின் நடுநிலையான மீள்வாசிப்பிற்கோ உதவப்போவதில்லை.

பிரித்தானியர் வெளியேறியபோதே தமிழருக்கு எதிரான இனவாத அரசியலும் தொடங்கிவிட்டது. அப்போதிருந்தே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்திய வெளியுறவுக் கொள்கை இலங்கை அரசுக்கு ஆதரவாகவும், தமிழர் நலன்களுக்கு எதிராகவும் செயல்பட்டு வருவதான தோற்றப்பாட்டினை மறுதலிக்க முடியாது. இலங்கையில் இந்தியத்தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோதும். அவர்கள் 'நாடற்ற மக்கள்' (Stateless People) ஆனபோதும் இந்திய அரசு கண்டுகொள்ளவில்லை. 1964 இல் 'சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்' மேற்கொள்ளப்பட்டபோதும் 150,000 தமிழ்த் தோட்டத் தொழிலாளர் நாடற்றவர்களாகவே இலங்கையில் விடப்பட்டனர். 1956 ஆம் ஆண்டு 'சிங்களம் அரசகரும மொழி' என அரசியல் சட்டம் திருத்தப்பட்ட போதும் 1972 ஆம் ஆண்டு 'பௌத்த மதம் அரச மதம்' ஆனபோதும் இந்தியா மௌனம் காத்தது. பாரம்பரியமாகத் தமிழர் வாழ்ந்துவரும் பிரதேசங்களில் 1972 முதல் இலங்கை அரசு பல சிங்களக் குடியேற்றங்களை நிறுவிய போதும் இந்தியா கண்டிக்கவில்லை. இவற்றின் உச்சமாக 1974இல் தமிழகத் தமிழரின் பாரம்பரியச் சொத்தான கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

2009 மே மாதத்தின் பின்னர் உலகின் மனச்சாட்சி ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் திரும்பிய வேளைகளிலும் இந்திய இராஜதந்திர நகர்வுகள் இலங்கைக்கு ஆதரவானதாகவும், நெருக்கடியிலிருந்து தப்பிப் பிழைக்க உதவும் வகையிலுமே அமைந்தது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்தபோது ஸ்பெயின், கனடா, மெக்சிகோ, இங்கிலாந்து, செக்குடியரசு, நெதர்லாந்து, டென்மார்க் போன்ற பல நாடுகள் நிபந்தனையின்றி ஆதரித்த போதும் இந்தியா முதற்கட்டத்தில் இலங்கையைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்டமையையும், இரண்டாம் கட்டத்தில் தீர்மானத்தை மென்போக்குடையதாக மாற்ற அழுத்தம் கொடுத்து மாற்றத்தின் பின் ஆதரித்தமையையும் ராஜீவ்காந்தியின் மரணத்தோடும், சோனியாவின் பிடிவாதத்தோடும் மட்டும் தொடர்புபடுவதல்ல.

1983 ஆம் ஆண்டு நடந்த இனப்படுகொலையைக் கண்டித்து ஆர்ஜன்டினா, மொரிசியஸ் நாடுகள் ஐ.நா. பொதுச் சபையில் இலங்கைக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டுவருவதாக அறிவித்தபோது இந்தியா நடந்து கொண்ட விதத்தையும், 1986 - செப்டம்பர் மாதம் இங்கிலாந்தும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஐ.நா. பொதுச் சபையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசிய விவாதத்தின் போது இந்தியா இலங்கை அரசுக்கு ஆதரவாகப் பேசியதையும், 1987 - மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் ஆர்ஜென்டினா, கனடா, நோர்வே மற்றும் செனகல் நாடுகள் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் இந்தியா கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்ததையும் அறிந்தவர்கள் சிறுபிள்ளைத்தனமாக ராஜீவ்காந்தியின் மரணத்தோடும், சோனியாவின் பிடிவாதத்தோடும், புலிகளின் இராஜததந்திரக் கையாளலின் தவறுகளோடும் மட்டுமே இந்திய இராஜதந்திரத்தை மட்டுப்படுத்தி விடமாட்டார்கள்.

முதன்முதலாக உலகின் மனச்சாட்சி 2009 மே மாதத்தின் பின்னர்தான் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகத் திரும்பியிருப்பது போன்ற தோற்ற நிலையைத்தரும் அரசியல் கலந்துரையாடல்கள் இன்னொரு அபத்தம். அவ்வாறு கூறுவதும் எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்குச்சமம். இத்தகைய கருத்துநிலைகள் சர்வதேசம் தொடர்பான மிகையான எதிர்பார்ப்புக்களையும், யதார்த்தத்தை விஞ்சிய அதீத நம்பிக்கைகளையும் விதைத்துவிடும் அபாயம் மிக்கவை. இதன் அர்த்தம் முள்ளிவாய்க்காலில் உரிமைப் போருக்காக தம்மைக் கொடையாக்கி - தங்கள் உயிர்களை அர்ப்பணித்து சர்வதேசத்தின் மனச்சாட்சியை உலுக்கிய மக்களினதும் போராளிகளினதும் தியாகத்தை மலினப்படுத்துவதல்ல.

கடந்த 70 ஆண்டு கால உரிமைப் போரில், தமிழர்கள் மீது வன்முறைகள் ஏவப்பட்ட போதும், தமிழர் தாயகப் பகுதிகளிலும், அதற்கு வெளியேயும் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியாமல் – தமிழர்களுக்கென்று பாதுகாப்பு அரண் ஒன்று இல்லாமல், இனக்கலவரங்களின் பெயரால் தமிழர்கள் அடித்து விரட்டப்பட்டு, அவர்கள் இன அழிப்புச் செய்யப்பட்ட போதும் பல தடவைகள் உலக மனச்சாட்சி தமிழர்களுக்கான அனுதாபத்தையும், கரிசனையையும் வெளிப்படுத்தியிருக்கின்றது. தவிர்க்கவியலாமலோ, இராஜீயச்சூழலின் புறநிலைகளாலோ சில சந்தர்ப்பங்களில் இந்தியாவின் கரிசனையும், அக்கறையும் கூட தமிழர்கள் சார்பானதாக இருந்திருக்கின்றது.

'1950 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் இலங்கையில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டித்து தமிழகத்தின் சென்னை மாநகரத்தில் பேரணி ஒன்றை நடத்தினார். 1961-இல் தமிழர்கள் தாக்கப்பட்டபோது, 'இலங்கையில் தமிழினமும், தமிழ் மொழியும் பூண்டோடு அழிக்கப்படுவதில் இருந்து காப்பாற்ற - உண்மை நிலை அறிய ஒரு குழுவை அனுப்புமாறு ஐ.நா.சபைக்கு வேண்டுகோள் விடுத்துக் கடிதம் அனுப்பினார்.

இந்திராகாந்தியும் 1977-ல் இந்தியப் பாராளுமன்றத்தில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டச் செய்து அதில் அமிர்தலிங்கத்தைப் பேச வைத்தவர். ஈழப்போராட்டத்திற்கான சர்வதேச அளவிலான ஆதரவுத்தளத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியவர். 1983-ம் ஆண்டு ஜுலை கலவரம் ஏற்பட்டு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, வெளிநாட்டு அமைச்சராக இருந்த பி.வி.நரசிம்மராவையும், ராஜாங்க அமைச்சர் ஜி.பார்த்தசாரதியையும் அனுப்பி வைத்தவர். 1983-ம் ஆண்டு சுதந்திரதின உரையில், 'இலங்கையில் திட்டமிட்ட இனப்படுகொலை நடக்கிறது' எனக்கண்டித்தவரும் கூட.

இலங்கை இனப்படுகொலையை ஐ.நா. மன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எம்.ஜி.ஆரின் கோரிக்கையை ஏற்று, இந்திரா காந்தி அமெரிக்காவில் ஐந்து நாட்கள் தங்கி, ஐ.நா. கூட்டத்திற்கு வந்திருந்த நாடுகளின் பிரதமர்கள், அதிபர்கள், தூதர்கள் அனைவரையும் சந்தித்து இலங்கை பிரச்சினை தொடர்பாக விளக்கினார். ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பெரஸ் டி.கொய்லர் உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்களுக்கு இலங்கை இனப்பிரச்சினை அப்போதுதான் புரிந்தது. 84 நாட்கள் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் 70 நாட்கள் பண்ருட்டிராமச்சந்திரன் கலந்துகொண்டு இலங்கை இனப் பிரச்னைகளை விளக்கினார். இவற்றையெல்லாம் கூறுவதன் நோக்கம் கடந்த காலத்தில் நடந்த பல நம்பிக்கை தரத்தக்க சம்பவங்கள் வெறும் சம்பவங்களாகவே நகர்ந்து போனதை ஞாபகம் கொள்வதற்கே.

இன்று மீண்டுமொரு நம்பிக்கை துளிர்த்திருக்கிறது. ஐ.நா மனிதஉரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையும் அமெரிக்காவும்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாசிரியர்களே நாட்டுக்குத் தேவை!

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்திற்குச் சமம் என்பர். இது போல் தான் மாணவ சமூகமும் குறிக்கோள், இலட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவ மனதில் நன்கு பதிய வைத்து மாணவர்களை சீரிய வழியில் வழிநடத்துவதில் ஆசிரியர்களின் பங்கு விசாலமானவை. தனது வழிகாட்டலின் மூலம் கிடைக்கும் வெற்றியை பார்க்கும் ஆசிரியர்களின் மனதில் தோன்றும் மகிழ்ச்சியை அளவிட முடியாது. தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதே போல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல, மாறாக உயிரூட்டுபவர்கள் என்றாலும் மிகையாகாது.

அக்டோபர் மாதம் 06ஆந் திகதி ஆசிரியர் தினம் உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. பயிற்றுவிக்கும் ஆசான்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் கொண்டாடப்படும் ஒரு நாள். மாணவனுக்கு ஞானத்தின் சுடரை ஏற்றுகிற பணி ஆசிரியருடையது. அவர்களை நன்றியுடன் நினைவு கூரவும், அவர்களின் பணி தொடர வாழ்த்துவதுமே ஆசிரியர் தினம் கொண்டாட்டங்களின் பிரதான எதிர்பார்க்கையாகும். மனிதனை மனிதனாக, உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியைகளைச் சொல்வதுண்டு. மனிதனை முதன்மைப்படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள்

தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ, மாணவி சமூகத்தின்பங்கு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள் தான் கற்றுக் கொடுக்கின்றனர். ஆசிரியர்களின் பணியைக் கொண்டாட ஒரு தினத்தை மட்டும் ஒதுக்குவது முறையல்ல என்றும் சிலர் வாதிடுவர். அதனை ஒரு தினத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தக்கூடாது என்பது இவர்களின் வாதமாகும். உலகில் வாழ்ந்த, வாழும், வாழப்போகும் ஒவ்வொரு ஜீவனுக்கும் பின்னால் ஓர் ஆசான் இருந்தான், இருக்கிறார், இருப்பார் என்பதே யதார்த்தமாகும்.

ஒரு சிறந்த ஆசிரியர்களின் பண்புகள், குணங்களைப் பார்க்கும் மாணவ, மாணவிகளின் மனதில் அவை அப்படியே பதியும். அதனால் ஆசிரியர்கள் தங்களை மாணவர்களின் காலக் கண்ணாடி என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி வருகின்றனர். அப்படி பணியாற்றுவதன் மூலம் கடினமாக உழைத்து வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாறுகின்றனர். குரு, ஆசான், ஆசிரியர், வாத்தியார், இப்படி பல அவதாரங்கள் கொண்ட மொத்த உருவம் ஆசிரியர். உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் வார்த்தைக்கு வார்த்தை எதிர்ப்பதம் உண்டு. ஆனால் ஆசான் என்ற ஒரு வார்த்தைக்கு இலக்கண வித்தகர்கள் எதிர்மறை வார்த்தை தரவில்லை. ஒரு சமூகம், அதி உன்னத நிலையை அடைந்திருந்தால், நிச்சயமாக அதன் பின்னால் ஆசிரியர் சமூகம் இருப்பதாக அர்த்தம் கொள்ளப்படும் ஒரு சமூகம் தாழ்ந்து போனால், ஆசிரியர் சமூகம், தனக்கான பணியை சரிவரச் செய்திடவில்லை அர்த்தம் கொள்ளப்படும். வேறெந்த துறையை விடவும் அதிக பொறுப்புகளும், அதிக முக்கியத்துவமும் நிறைந்தது அவர்கள் பயணம்.

மாணவர்களுக்கு அதிகம் தேவைப்படுவது, என்றென்றுமான ஊக்கமும், தன்னம்பிக்கையும், நன்னெறிகளும்.. இதைச் சரியாக வழங்கிவிட்டால் அங்கே ஆசிரியர் வேலை அதன் முழு நிறைவை எட்டியதாக அர்த்தம். ஒரு மாணவன் ஆசிரியரைச் சேரும் தருணத்தில், வெறும் மண் கலவையாய் மட்டுமே உள்ளான். அவனை தேவையான வடிவில் வார்ப்பது ஆசிரியனின் பணியாக உள்ளது. தெளிவான, சிறப்பான மாணவ சமூகத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு முதன்மையானது என்பதை இங்கு யாரும் மறுக்கமுடியாது. அதிலும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் உழைப்பினைத்தான் நாம் அதிகம் பாராட்ட வேண்டும். சிறு குழந்தைகளுக்குச் பாடங்களை அடித்தோ, அல்லது மிரட்டியோ கற்றுக் கொடுக்க முடியாது. அப்படிச் சொல்லிக் கொடுத்தாலும் அவர்களுக்கு ஏறாது. குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது அசிரியர்கள் குழந்தைகளாகவே மாறிவிட வேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் முழுக்கவனமும் ஆசிரியர்கள் மீது விழும். அப்படி குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது அவர்களின் மழலைப் பேச்சையும், மழலைச் சிரிப்பையும் காணும் பொழுது புதிய உலகிற்குச் சென்ற ஓர் உன்னத உணர்வு மனதில் ஏற்படும். அதே போல் கிராமத்தில் இருக்கும் பள்ளிகளில் பணியாற்றுவதில் கிடைக்கும் மகிழ்ச்சியும் சற்று வித்தியாசமானது. அங்கு ஆரம்பக் கல்வி படிக்கும் மாணவன் பின் வாழ்வின் எத்தகைய உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் அப்பள்ளியையும் ஆசிரியர்களையும் மறப்பது இல்லை.ஆசிரியர் பணியில் சேர்ந்த பொழுது ஆரம்ப கல்வியை மாணவ, மாணவிகள் முடித்துச் செல்லும் பொழுது உண்மையிலேயே பெரிய இழப்பாக இருந்தது. அது தற்பொழுது பழகிவிட்டது.

ஒவ்வொரு வரும் ஒரு குணம், மாறுபட்ட குணாதிசயங்கள், மாறுபட்ட சிந்தனைகள் என்று ஓர் இனிய கலவைகளை ஒரே இடத்தில் பார்க்க நினைத்தால் பள்ளிகளுக்குச் செல்லலாம். ஒரு நாட்டின் எதிர்கால தலைவிதி ஒவ்வொரு வகுப்பறைகளிலும் உருவாக்கப் படுகிறது என்பதை ஆசிரியர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சிறந்த ஆசிரியர்கள் என்பவர்கள் செயலுக்கும் சொல்லுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பவர்களாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் ஆசிரியர் பணி சிறப்பாகப் போற்றப்படும். அதே போல் மாணவர்களைச் சிறந்த பண்போடு உருவாக்க நினைக்கும் ஆசிரியர்கள் முதலில் ஒழுக்கமாக இருக்க வேண்டியது அவசியம். ஒரு ஆசிரியர் தவறு செய்தால் எட்டின அளவிற்கு எதிர்கால சந்ததிகள் பாதிக்கப்படுவர் என்று ஒரு கருத்து இருக்கிறது இதனை உணர்ந்து செயல்பட்டால் ஆசிரியர் பணி சிறக்கும், அதனால் நாடு, சிறக்கும்.

பிற பணிகளில் இல்லாதது ஆசிரியர் பணியில் இருக்கிறது. மாதா பிதா குரு தெய்வம் என்று தான் சொல்கிறோம். தமிழ் சிறப்பாயிரம் பாடலில் சொன்னது போல் அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை உலகிற்கு தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியன் உலகத்தையே குழந்தைகளுக்கு தருகிறான்.

ஒரு சமயம் அரிஸ்டாட்டில் தம் மாணவருடன் ஆற்றின் கரைக்கு வந்தார். மாணவர்களை கரையில் நிற்க வைத்தவர், நான் ஆற்றின் அக்கறை வரையில் சென்று ஆற்றில் ஏதாவது சுழல்கள் உள்ளதா என பார்த்து வருகிறேன் என்றார். அவர் ஆயத்தம் கொண்ட சமயம், அவரின் ஒரு மாணவர் தண்ணீரில் நீந்தி செல்வதை கண்டார். மறு கரை வரை சென்று திரும்பிய மாணவர், குருவே, சுழல்கள் இல்லை, நாம் தைரியமாய் ஆற்றை கடக்கலாம் என்றார். அந்த நிலையில், அரிஸ்டாட்டில், உன்னை சுழல்கள் எடுத்து சென்றிருந்தால் என்னவாகி இருக்கும் என்றார். அதற்கு அந்த மாணவன், இந்த இந்த அலக்சாண்டர் போனால், ஆயிரம் அலேக்சாண்டர்களை உருவாக்கும் வல்லமை உள்ளவர் நீங்கள். ஆனால் ஒரு அரிதான குருவை இழந்தால் நாங்கள் பரிதவித்து போவோம் என்றான். அப்படி ஆசிரியர் மாணவர் உறவு அமைவது நல்ல சமூகத்துக்கு புது சுவாசத்தை கொணரும்.

ஆசிரியர் பணி எவ்வளவு தூய்மையாகக் காணப்பட்டாலும்கூட, அண்மைக் காலங்களில் ஆசிரியர்களைப் பற்றி தரக்குறைவான சில சம்பவங்கள் ஊடகங்களில் வெளிவருவதை நாம் பார்க்கின்றோம். விசேடமாக சில பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் தமது மாணவிகளைப் பாலியல் துஸ்பிரயோகத்திற்குட்படுத்தும் செய்திகளை சில மேற்கத்தைய நாடுகளில் சில ஆசிரியைகள் மாணவர்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தும் செய்திகளையும் காண்கின்றோம். அதேபோல மாணவர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லும் பல்வேறு சம்பவங்களையும் கேள்விப்படுகின்றோம். உண்மையிலேயே இது வேதனைப் படக்கூடிய ஒரு விடயம். இத்தகைய ஆசிரியர்களை இனங் கண்டு சட்டரீதியாகக் கடுமையாக தண்டனைகளை வழங்கி ஆசிரியத் தொழிலின் மாண்பினைப் பேண வேண்டியது சட்டத்துறையினரதும், நீதித்துறையினரதும் கடமையாகும்.

ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தம்மை, தாம் முதலில் உணர வேண்டும். ஆசிரியசேவை மனதால் உணரப்பட வேண்டியது. ஏதோ விடுமுறைகள் நிறைந்த இலகுவான தொழில் என்று எண்ணாமல் தியாக உணர்வுடன் செய்யப்பட வேண்டிய சேவை என்பதைப் புரிந்து கொள்வது இன்றியமையாதது. திருத்திக் கொள்ளும் மனப்பாங்கை வளர்க்க வேண்டும். மாற்றமே ஆசிரியரின் செயற்பாட்டு ரீதியான அடிப்படை வளர்ச்சியாகும். நாம் எதை செயற்படுத்த விரும்புகிறோமோ அதை முதலில் நாம் மாணவர்களுக்கு முன்மாதிரியாக செய்துகாட்ட வேண்டும். ஆசிரியர்களின் வார்த்தைகளையும், வர்ணிப்புகளையும் மாணவர்கள் கவனிப்பதை விட அவர்களின் நடத்தை, முகபாவம் என்பவற்றையே மாணவர்கள் முழுமையாகச் கிரகிக்கிறார்கள். ஆசிரியரின் நடத்தை தான் மாணவர்களின் நடத்தை ரீதியான மாற்றத்திற்கு முன்மாதிரியாக அமைகிறது. சகல வசதிகளையும் கொண்ட வகுப்பறையில் சிறந்த குடும்பப் பின்னணியையும் சிறந்த உள நிலையையும் கொண்ட மாணவனுக்குக் கற்பித்து அம் மாணவனை முன்னேற்றுவதல்ல. மாறாக தான் கற்பிக்கும் ஒவ்வொரு மாணவனையும் பற்றி சகல விடயங்களையும் அறிந்து, பொருத்தமற்ற சுழலில், கல்வியறிவு குறைந்த பின்னணியில் இருந்து வரும் மாணவனை வளப்படுத்துவதே வினைத்திறன் மிகு ஆசிரியருக்கு வேண்டியது. இதுவே ஓர் ஆசானின் வெற்றியும், பெருமையுமாகும்.

நவீன காலத்தில் ஆசிரியர் தொழில் பணத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். குறிப்பாக இக்காலகட்டத்தில் பணத்தை மையமாகக் கொண்டு கல்வி விலைபேசப்படுகின்றது. இந்நிலை எதிர்காலத்தில் பெரும் சாபக்கேட்டை உருவாக்கலாம். பணத்தைச் சேகரிப்பதற்கான கல்வியை மட்டும் வழங்காது, நல்ல பண்பாட்டு ரீதியான, ஒழுக்க விழுமியங்களை நிலை நாட்டும் நிறை கல்வியை ஆசிரியர்கள் வழங்குவது காலத்தின் தேவையாகும். ஆசிரியர் தொழில் புனிதத்துவம் மிக்கவை. தெய்வீகமானவை. எனவே, இத்தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு ஆசிரியர்களும் செயற்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இத்தினத்தில் இது குறித்து திடசங்கற்பம் பூணுவோமாக!

**புண்ணியாமீன்** (ஆசிரியர்)

## பெருமதிப்பிற்குரிய ஆசிரியருக்கு...

எல்லா மனிதர்களுமே நேர்மையானவர்களல்லர். எல்லா மனிதர்களுமே உண்மையானவர்களுமல்லர் என்பதை எனது மகன் கற்றுக்கொள்வான் என்பதையறிவேன். ஆனால், மனிதர்களிடையே இருக்கக்கூடிய ஒவ்வொரு போக்கிரிக்கும், அங்கு இன்னொரு சுத்தவீரன் இருக்கிறான் என்பதையும், ஒவ்வொரு சுயநல அரசியல்வாதிக்கும் அங்கு அர்ப்பணிப்புமிக்க தலைவன் இருக்கின்றான் என்பதையும் போதியுங்கள். ஒவ்வொரு எதிரிக்கும் அங்கு ஒரு நண்பன் இருக்கின்றான் என்பதையும் அவனுக்குப் போதியுங்கள்.

வழியில் கண்டெடுத்த ஐந்து டொலரைவிட, உழைப்பினால் பெற்ற ஒரு டொலரின் மதிப்பு அதிகம் என்பதை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். இதற்கு காலம் எடுக்கும், வெகுகாலம் எடுக்கும் என்பதையறிவேன். இருப்பினும் முயற்சிசெய்யுங்கள்

இழப்பது எவ்வாறு என கற்றுக்கொடுங்கள். அவ்வாறே வெற்றியைத் துய்ப்பதற்கும் கற்றுக்கொடுங்கள். முடியுமாயின், பொறாமையில் வீழாதிருக்க வழிப்படுத்துங்கள்.ஆழ்ந்த சிரிப்பின் இரகசியத்தை கற்றுக்கொடுங்கள்; கொடுமைக்காரர் இலகுவில் மண் கௌவுவர் என்பதை தாமதமின்றி கற்றுக்கொள்ள வழிவகுங்கள்.

முடியுமாயின், நூல்களின் அற்புதத்தை கற்றுக்கொடுங்கள். ஆனாலும், வான்வெளியிலுள்ள பறவைகள், கதிரவனொளியில் தெரியும் தேனீக்கள், பசுமையான மலையோர மலர்கள் போன்றவற்றின் விசித்திரங்களை எண்ணிப்பார்க்க நேரம் ஈயுங்கள். பாடசாலையில் ஏமாற்று வழிகளில் சித்தியடைவதிலும், பரீட்சையில் தவறுவது கௌரவமானது என்பதை கற்றுக் கொடுங்கள். அவனது எண்ணங்கள் தவறானவை என அனைவரும் கூறினாலும், தன் எண்ணங்களுக்கு விசுவாசமாக இருப்பது குறித்துக் கற்றுக்கொடுங்கள். மென்மையானவர்களுடன் மென்மையாகவும், கடுமையானவர்களுடன் கடுமையாகவும் பழக கற்றுக் கொடுங்கள். ஒவ்வொருவரும் வெற்றி பெறுவோரின் பக்கம் சாய்கின்றபோது, அக்கும்பலைப் பின்பற்றாமல் இருப்பதற்கான மனோபலத்தை எனது மகனுக்குக் கற்றுக்கொடுங்கள். அனைவருக்கும் செவிமடுப்பதற்குக் கற்றுக் கொடுங்கள். ஆனால், அவனது காதில் விழும் அனைத்திலுமுள்ள உண்மையை நுணுகி ஆராய்ந்து, நல்லனவற்றை வடிகட்ட கற்றுக்கொடுங்கள்.

முடியுமாயின், கவலையில் தோய்ந்திருக்கும்போது எவ்வாறு சிரிப்பதென்று கற்றுக்கொடுங்கள். கண்ணீர் விடுவதற்காக வெட்கப்படத் தேவையில்லை என்பதைக் கூறுங்கள். அவநம்பிக்கையாளரை ஏளனம் செய்வதற்கும், அளவுக்கு அதிகமான இன்னலம் குறித்து எச்சரிக்கையாயிருப்பதற்கும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். சரீரபலத்தையும் அறிவையும் சிறப்பாகச் சந்தைப்படுத்த அவனுக்கு கற்றுக்கொடுங்கள். ஆனால் இதயமும், ஆன்மாவும் விற்பனைக்கானவையல்ல என்பதை மனதிற்பதியச் செய்யுங்கள். ஊளையிடும் வன்முறைக் கும்பலுக்கு காதுகொடுக்காது அதை மூடிக்கொள்வதற்கும் தனது பக்கம் நியாயம் உள்ளது என அவன் கருதுவானாயின் அதற்காக உறுதியாக நின்று போராடுவதற்கும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அவனை மென்மையாக நடத்துங்கள் ஆனால் மிக்க செல்லம் கொடுத்துக் கெடுக்க வேண்டாம். ஏனெனில் தீயினாலே இரும்பு புடமிடப்படுகிறது. பொறுமையற்றிருப்பதற்கான வல்லமையை அவன் கொண்டிருக்கட்டும். வீரமாக இருப்பதற்கான பொறுமையை அவன் கொண்டிருக்கட்டும். தன்னில் சிறந்த நம்பிக்கையை அவன் கொண்டிருப்பதற்கு அவனுக்கு கற்றுக்கொடுங்கள். அதனால் அவன் மனிதகுலத்தில் சிறந்த நம்பிக்கையை எப்பொழுதுமே வைத்திருப்பான்.

பெரும் உத்தரவாக இது அமைந்துவிட்டது. என்னசெய்யக் கூடும் எனப் பாருங்கள் !. அவனோ சிறு குட்டி.

**ஆபிரகாம் லிங்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook Search Home

Write Post | Add Photo / Video | Ask Question

**தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணியின் தலைமையை துறந்தார் ஆசிரியர் வரதர் முகநூல் வாயிலாக பகிரங்க அறிவிப்பு......**



என் அன்புக்குரிய தமிழ் உறவுகளே

2010ம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் நான் நேரடி அரசியலில் முதன் முதலே பங்குபற்றினேன். பின்னர் தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் தலைவராக செயற்பட்டேன். எனினும் அப் பதவிக்குரிய கடமைகளை சுயமாக என்னால் மேற்கொள்ளமுடியாமல் இருந்ததை காலப்போக்கில் உணர்ந்து கொண்டேன். எனக்குப் பல வரையறைகள் காணப்பட்டன. இந்நிலையில் தலைவர் பதவியில் தொடர்ந்து இருப்பது அர்த்தமற்றது என்பதை உணர்ந்து கொண்டேன்.

இங்கு துவிச்சக்கரவண்டியை நிறுத்தவேண்டாம் என்று ஒரு அறிவித்தல் பலகை நாட்டப்பட்டிருக்கும். ஆனால் அதற்கு அருகிலேயே சைக்கிள் நிறுத்தப்பட்டிருக்கும். சில சந்தர்ப்பங்களில் இவ் அறிவித்தல் பலகைமீதே துவிச்சக்கரவண்டி சாத்தப்பட்டிருக்கும். இது ஒரு முரண்பாடான நிலை. இந்நிலையில் ஒன்றில் அறிவித்தல் பலகையை எடுக்கவேண்டும். அல்லது துவிச்சக்கரவண்டியை அவ்விடத்திலிருந்து எடுக்கவேண்டும்.

இத்தகைய ஒரு முடிவைத்தான் நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு எடுத்தேன். அதாவது தலைவர் பதவியிலிருந்து விலகியதுடன் கட்சி நடவடிக்கைகளிலிருந்து முற்றாக ஒதுங்கி இருந்தேன். எனினும் இவ்விடயம் பெரிதும் பகிரங்கப் படுத்தப் படாமல் இருந்தது. இதனால் பலரின் கேள்விகளுக்கும் விமர்சனங்களுக்கும் நான் அடிக்கடி உட்படவேண்டியிருந்தது. அவர்களின் செயற்பாடுகளுக்கும் அவர்களால் விடப்படும் அறிக்கைகளுக்கும் பலருக்கு விளக்கம் கொடுக்கவேண்டிய இக்கட்டானநிலை எனக்கு ஏற்பட்டது.

இம்மாகாண சபைத் தேர்தலின்போது இம்முரண்பாடுகள் மேலும் முற்றியது. எனக்கு என்று ஒரு தனிப்பட்ட அரசியற் கருத்து உண்டு. மாகாணசபை முறை வலுவற்றது - அதிகாரமற்றது தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யமாட்டாது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இதனால்தான் இம் மாகாணசபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியும் பினர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றாமல் இம்முறைமையை முற்றாக நிராகரித்திருந்தன. அன்று தமிழ் மக்களிடம் வேறு ஒரு தீர்வும் இருந்தது. அதற்காக போராடுகின்ற அமைப்பும் இருந்தது. எனவே அன்றைய சூழ்நிலையில் இம் மாகாணசபை முறையை நிராகரித்ததில் ஒரு நியாயம் இருந்தது. ஆனால் இன்று நிலைமை முற்றிலும் தலைகீழாக மாறிவிட்டது. அரசியல்ரீதியில் ஜனநாயகரீதியில் தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைக்காகப் போராட வேண்டியநிலையில் உள்ளனர். இந்நிலையில் மாகாணசபைத் தேர்தலில் ஒருநிலைப்பாடு எடுக்கவேண்டியநிலை எனக்கு ஏற்பட்டது. கட்சி தலைமையிடம் எனது நிலைப்பாட்டை கூறினேன். மாகாணசபை முறையின் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதோடு, இன்றைய சூழ்நிலையில் மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஆதரிக்கவேண்டும் என்றவகையில் ஓர் அறிக்கையை விடுமாறு கேட்டேன். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையில் எனது நிலைப்பாட்டைத் தனியாக அறிவிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். எனது இச் செயற்பாடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு சங்கடங்களை உருவாக்கியிருக்கலாம். நான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து முற்றாக விலகிவிட்டேன் என்பதைப் பகிரங்கப்படுத்தாதவரை இந்நிலைமை காணப்படும். எனவே நான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து முற்றாக விலகிவிட்டேன் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

Like | Comment | Share |

தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணியின் தலைவராக இதுவரை காலமும் செயற்பட்டுவந்த பிரபல பொருளியல் ஆசிரியர் வரதர் என அழைக்கப்படும் சின்னத்துரை வரதராஜன் தலைமைப் பதவியைத் துறந்துள்ளார். அதனைத் தனது முகநூலின் ஊடாகப் பகிரங்கமாக சகலருக்கும் தெரியப்படுத்தியுமுள்ளார். அவரது பகிரங்க அறிவித்தலைத் தொடர்ந்து முகநூலில் தொடரும் விவாதங்கள் தமிழ்த்தேசிய அரசியலில் மிக முக்கியமான பதிவுகளாக இருப்பதனால் முரசொலி எதுவித திரிபும் இன்றி அவ்விவாதத்தைப் பதிவுசெய்கின்றது. இது தொடர்பில் தங்கள் கருத்துக்களையும் முகநூல் விவாதத்தில் இணைந்து தெரிவிக்கலாம்..

- ஆசிரியர் -



**Kanapathippillai Thulasithasan**

நடைமுறை நிலைமைகளை விளங்கிக்கொள்ளாத ஒரு கூட்டத்துடன் சேர்திருப்பதை விட நடைமுறை நிலைமையை விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு மக்கள் கூட்டத்தை கட்டியெழுப்புப வனே புரட்சியாளனாகவும் சரியான பாதையை காட்டக்கூடிய தலைவனாகவும் இருக்கமுடியும். இதைப் புரிந்து கொள்ள மறுக்கும் தலைமையே தோல்வியடைவதுடன் அத் தலைமையை நம்பிய மக்கள் கூட்டமும் அரசியல் அநாதைகளாக்கப்படுகிறார்கள் இன்னொரு தலைமை உருவாகும் வரை.........................

Like | Comment | Share |



**Veluppillai Reegana**

ஆசிரியர் அவர்களுக்கு.....தங்களின் பதிவு கண்டு நான் ஆச்சரியப்பட வில்லை இது என்றோ ஒரு நாள் நடக்கும் என்று எனக்குத் தெளிவாக தெரியும், ஆனால் இவ்வளவு விரைவில் நீங்கள் முகபுத்தகத்தில் பதிவிடும் அளவுக்கு செல்லும் என்று நான் நினைக்க வில்லை. இப்போதாவது உணர் ந்து உங்கள் முடிவை அதுக்குரிய காரணங்களை தர்க்க ரீதியில் சொல்லி இருக்கிறீர்கள். அந்த வகையில் நல்ல விட யம் தான். இதை தான் 2010 இல் நீங்கள் அரசியலுக்குள் வருவதாக அறிந்த போதே சொல்லி இருந்தேன் உங்களுக் கும் அரசியலுக்கும் வெகுதூரம் என்று. எவ்வாறாயினும் ஒரு கட்சியின் தலைமையில் இருக்கும் உங்களால் கூட கடமைகளை செய்யமுடியாமல் கீழ்மட்ட உறுப்பினர்கள் "வரையறைகளை" போடுகிறார்கள் என்றால், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எவ்வளவு வரையறைகள் கட்டுப்பாடுகள் இருக்கும் என்று ஜோசித்து பார்த்தீர்களா? ஒருபுறத்தில் கடும் போக் குடைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் புலம் பெயர் அமைப்புகள் புலிகளின் ஊடகங்கள் என்று ஒருபுறம், இந்தியா மற்றும் சர்வதேசம் என்று ஒருபுறம் மற்றும் தனது கட்சிக்குள் "தலைவர்" பதவியை பிடிக்கத் துடிக்கும் சுரேஷ் மற்றும் உதயன் சரா போன்ற வகையறாக்கள். இதைவிட சிங்கள இனவாத கட்சிகளினுள் கட்டுண்டு இருக்கும் மகிந்த அரசாங்கம் அதைவிட கடும் போக்குகளை கொண்ட சிங்கள மக்கள் என்று எவ்வளவு பெரிய ....சாதாரண மனிதர் நினைத்து கூட பார்க்க முடியாத சவால்களையும் சுமைகளையும் தாங்கவேண்டிய அதே நேரம் எல்லாவற்றையும் சமாளித்து ஒரு தீர்வு ஒன்றுக்குச் செல்வது என்றால் எவ்வளவு கஷ்டம். அப்படிப்பட்ட கூட்டமைப்பையும் சம்பந்தனையும் நீங்கள் கூட கடுமையாக விமர்சனம் செய்து இருந்தீர்கள். இப்போது அது எவ்வளவு பெரிய தவறு என்று விளங்கி இருக்கும். எதுவும் வெளியில் இருந்து "குறை சொல்வது" இலகு. ஆனால் அதை, உரிய பதவியை அடைந்த பின் அந்த பதவியை வைத்து கொண்டு செய்வது என்பது இயலாத ஒன்று. இது தான் காலா காலமாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

Like | Comment | Share |



**Ratnasingam Sharveswara**

உண்மையில் முன்னணியினரும் முன்னை மாதிரி இல்லை. சிலர் மக்கள் தங்களை பாராளுமன்றத் தேர்தலில் ஆதரிப்பார்கள் என்றெண்ணி சிலரின் உசுப்பேத்தலுக்கு அடிபணிந்து முன்னணியை உருவாக்கினார்கள். சிலரை வெளியேற்ற வேண்டும் எனும் பழைய பகமை உணர்வோடு இருந்த கூட்டமைப்பு தலைவர்களிடமிருந்து கஜேந்திரகுமாரும் வீணாக பிரிக்கப்பட்டு அரசியல் அநாதையாக்கப்பட்டார். முண்ணணியினர் முரண்பட்ட நேரம் பொருத்தமற்றது. தனித்து போனால் போர்முடிந்த பொழுதில் தமக்கு வெற்றி வாய்ப்பு இருக்கும் விடுதலைப் புலிகளின் நேரடி வாரிசுகள் நாங்கள் என வாக்குகளை வாங்கலாம் என எண்ணியவர்களுக்கு மக்கள் கொடுத்த அடி மீளமுடியாத அடி. இப்போது அவசரப்பட்டு எடுத்த முடிவால் அந்தரப்படுகின்றார்கள். விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற நிலை. மாகாண சபைத் தேர்தலில் புளொட் அமைப்பு பெற்றுள்ள எழுச்சியை உதாரணமாகக் கொண்டு கட்சியைக் காப்பாற்றத் தன்னும் கஜேந்திரகுமார் கூட்டமைப்புடன் இணையவேண்டியது அவசியம். இல்லையென்றால் இவ்வளவு நாளும் பேசிய 13வது திருத்தத்தை பற்றி பேசும் வாய்ப்பும் போய்விட்ட நிலையில் ஒரு பிரதேச சபையைக் கூட கைப்பற்ற முடியாது போய்விடும். எனக்குத் தெரிந்த மட்டில் முன்னணியின் கொள்கையை ஆதரிப்பதாக காட்டியபலர், இம்முறை மாகாண சபைத் தேர்த லில் வாக்களித்துள்ளார்கள். அது போன்று கூட்டமைப்புக்கு ஆதரவாகவும் பிரச்சாரம் செய்துள்ளார்கள். குறிப்பாக சிவில் சமூகம் எனும் அமைப்பில் முன்னணி சார்ந்தோரின் செல்வாக்கு உண்டு. அவர்கள் அறிக்கை விட்டமையை குறிப்பிடமுடியும். மற்றும் இன்னுமொருவிடயத்தையும் சொல்லியாக வேண்டும். இன்று தமிழ்த் தேசிய அரசியலில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் பங்களிப்பு போதியதாகவில்லை என்ற குற்றச்சாட்டையும் ஏற்றுக்கொண்டால் அதற்கு காரணமானவர்களும் முன்னணியினரே. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி ஒருவருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை வழங்ககூட்டமைப்பு முன்வந்து அதற்காக சிலர் பரிந்துரைக்கப்பட்ட போதும் இறுதிக் கணத்தில் அப்போதைய மாணவர் ஒன்றியச் செயலரின் மூளையைச் சலவைசெய்த முன்னணியினரின் செயற்பாட்டினால் மாணவர் ஒன்றியம் கூட்டமைப்புக்கு கெதிரான நிலைப்பாட்டை எடுத்து வீணாக ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை இழந்தது மட்டுமன்றி, மாணவர் ஒன்றியம் சொல்வதைத் தான் மக்கள் செய்கின்றார்கள் என்ற மாயையும் போட்டுடைத்து தங்கள் மதிப்பைத் தரமிறக்கிக் கொண்டார்கள். அன்றைய செயற்பாடுகளில் வரதன் சேருக்கும் கணிசமான பங்குண்டு. அப்போதைய நாள்களில் நான் அவரை அடிக்கடி பல்கலைக் கழக கல்லாசனத்தில் கண்ட துண்டு. இவ்வாறு எதிர்ப்பரசியல் என்பதை தனிமனித எதிர்பாகச் செய்யாது ஒரு குடையின் கீழ நின்று முதலில் கட்சியை காப்பாற்ற வேண்டும். வரதன் சேர் இனி நீங்கள் வேண்டுமென்றால் வருகின்ற மாநகர சபைத் தேர்தலில் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவது தான் தாங்கள் செய்யக்கூடிய அதி கூடிய நேரடி அரசியல். மற்றும்படி காலம் போய்விட்டது. மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும் தங்கள் பெயர்களை முன்னிலைப்படுத்தி மாகாண சபை முறைமைக்கு எதிராகவும் கூட்டமைப்புக்கு எதிராகவும் தங்கள் செவ்விகள் கூட வந்தனவே. நிதானமாகவிருத்தல் நிலைத்திருப்புக்கு அவசியமானது என்பது எனது கொள்கை.

Like | Comment | Share |



**Senthuran Velupillai**

பதவி பணத்துக்கு ஆசைப்படுபவர்கள் கொள்கைகளைப் பற்றி கவலைப்படுவதில்லை...

Like | Comment | Share |



**Siyanthan Kandiah**

வாக்களித்த, மாகாண சபை தேர்தலில் போட்டியிட்ட, பிரச்சாரம் செய்த எல்லோரையும் மக்கள் முண்ணனியின் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர் எனக்கருதமுடியாது. கூட்டமைப்பு தலைமைகள் மட்டும் அப்படி இருக்கலாம்....கிடைத்த பஸ்ஸில் ஏறி கொஞ்சத்தூரம் போக நினைக்கிறார்கள் அது தப்பில்லை..... தேசியத்தை நேசிக்கும் எவரும் மக்கள் முன்னனியை எதிர்க்க மாட்டார்கள்... கூட்டமைப்பினரைவிட அதிகமாக கேக்கிறார்கள் அவ்வளவு தான்....

Like | Comment | Share |




**Guruparan Kumaravadivel**

Ratnasingam Sharveswara அண்ணை 1. சிவில் சமூகம் ஒரு கட்சியினருக்கும் வக்காலத்து வாங்கியதில்லை. த தே கூ வை ஆதரிக்குமாறு கோரிய அதே அறிக்கையில் நாங்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்ததை யும் தாங்கள் அவதானித் திருக்கக் கூடும். தமிழ் சிவில் சமூகத்தைச் சேர்ந்த நாம் 13ஆவது திருத்தத்தை தமிழர்களின் பிரச்சனைகளுக்கான ஒரு அரசியல் தீர்வல்ல என உறுதியாக கருதுகின்றோம். அது அரசியல் தீர்விற்கான ஆரம்பப் புள்ளி தானும் இல்லை என்பதே எப்போதும் எமது

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு என்பது

- சிறுகதை -

- வ.வசந்தகுமார் -



ஒத்தகருத்துள்ள சொல் வீடு - இல்லம் - மனை ரீச்சர் கேட்கிறபோது அன்று தொட்டு இன்றுவரைக்கும் இதுவே பதில்.

வீட்டை எப்படியெல்லாம் அழகுபடக் கூறமுடியும்? வீடு எவ்வளவு அழகானது! இது தானே வாழ்வின் உறைவிடம். உறைவிடமின்றிய மனித வாழ்வு எப்படியிருக்குமென்பது அனுபவத்தில் காண்கிறபோது தான் புரிகிறது. இது அனுபவ உண்மை.

இப்போது சில சந்தேகம். வீடு என்பது இல்லமா? மனையா? இதை எப்போதும் இப்படியே அழைக்க முடியுமா? அவன் கற்றவைகளை மறக்கவில்லை. மீண்டும் ஞாபகத்திற்கு வரவழைத்தான் பெரு முயற்சி... தெளிவில்லை. சந்தேகம் இந்தச் சந்தேகம் ஏன் எழ வேண்டும்? யாரிடம் இதைத் தீர்த்துக் கொள்வது? ஆரம்பக் கல்வி ரீச்சர் இறந்து பல வருடங்களாகி விட்டன.

கற்குவியலாகக் குவிந்து கிடக்கும் வீட்டுக்கு இப்போது வேறு பெயர் இல்லம்? மனை?

அந்த எண்ணம் தவறானது அல்ல. நிறைய நியாயங்கள் அதில். அவன் நினைத்தது போல் எதுவுமே அங்கு இருக்கவில்லை. வீடுகள் கற்குவியல்களாகி, காடுகளாகி எதிர்ப்பதம் தேடிக் கொள்கின்றன. இதற்கு யாரிடம் பதில் கிடைக்கப் போகிறது? இது ஏன் இப்படி. இவ்விதம் ஆனது?

மாற்றமென்பது எளிதில் நிகழக்கூடியதல்ல. அது நீண்ட பிரயத் தனத்திலும், முயற்சியிலும் தான் தங்கியிருக்கிறது. யாரோ கூறியது ஞாபகத்திற்கு வந்தது. இந்த மாற்றங்கள் எல்லாம் இலகுவில் இப்போது நடந்து முடிகிறது. ஒன்றை ஆக்கும் போது ஏற்படுகின்ற உழைப்பின் வலு. அதன் பெறுமதி அதை அழிக்கும் போது ஏற்படுவதில்லை. அவன் அப்போது நினைத்தது இதை த்தான். காரணமின்றித் துவைத்துக் கிடக்கும் முன்னைய வாழ் விடம் அது அழிவுற்றுப் போனதன் உளைச்சல்.

அவன் ஆவலோடு வந்தபோது கனவுகள்.... நெஞ்சம் நிறைந்து கனக்க ... அந்தக் கண் கொண்டு பார்க்க முடியாத கொடிய காட்சி. நெஞ்சு வெடித்து விடும்போல் ... நெஞ்சு கனத்து வெம்பியழ அவன் முகப்பில் நின்றிருந்தான். காற்று மூசிக் கொண்டிருந்தது. அதனோடு தனித்த விசும்பல். நீண்ட பெருமூச்சு. அவன் கண்ணில் நீர் முட்டி வழிந்தது. ஆறுதல் தர எவருமற்று...

அம்மப்பாவின் நீண்ட உழைப்பு... பிறகு அம்மாவிற்குச் சீதனம்.. பிறகு அக்காவிற்கு சீதனம்... பிறகு?

அவன் மெல்ல எட்டி நடந்தான். ஓரத்தில் மிதிவெடி அபாயம் தொங்கவிடப்பட்டிருந்தது. மற்ற அடி எடுத்து வைக்கக் கால் இயங்க மறுத்தது. சற்று நேர ஓய்வு. பயம் கலந்த நிலை.

இதயம் நிமிடத்திற்கு எழுபத்திரண்டின் இருமடங்காய் துடித்தது. மறு அடி எடுத்து வைக்காத அவனது பார்வை அந்த வீட்டின் மீது இல்லை. குவிந்து கிடக்கின்ற பெயரிட முடியாத ஒன்றின் மீது.

வீட்டின் தனித்த சுவர் ஒன்று.. அதில் அரைவாசிப்பகுதியைக் காண முடியவில்லை. அதை மட்டும் ஏன் விட்டு வைத்துள்ளனர்?

அதில் தனித்த பறவையொன்று குந்தியிருந்து விட்டுப் பறந்து சென்றது. அது கூட சிறகசைத்த களைப்பினால் தான் ஓய்ந்திருந்து விட்டுப் பறந்திருக்க வேண்டும். பார்வையின் ஒளி சுவரில் மோதிப்பட்டுத் தெறித்தது. நத்தைகள் சுவரில் பீச்சியடித்திருந்தன. அவை நகருகின்ற போது அவற்றின் உடலில் இருந்து வெளிவரும் சுரப்பி ஒன்றினது வளைந்து நெளிந்த கோடுகளின் வரைபு. அவை கூடக் காலம் பட்டிருந்தன.

பலமாக ஊதித்தள்ளுகின்ற காற்றிலும் அந்தத் தனிச் சுவர் எக்கணமும் சரிந்து போகலாம். அதில் பாரிய பொத்தல்.அது ஷெல் துளைத்த அடையாளமாகத் தான் இருக்கும். வீடிருந்த இடத்தில் பற்றைக்காடாய் சடைத்து வளர்ந்திருந்தது காண்டை. பாம்புகளைத் தவிர வேறு எவையும் வாழத் தகுதியற்றுக் கிடக்கும் இடம்.

கவச வண்டிகளினதும். புல்டோசர்களினதும் அழியாச் சுவடுகள். இவை தான் இந்த வீட்டிற்குக் கொள்ளி வைத்திருக்க வேண்டும். இது கடும் பிரயத்தனங்களின் மத்தியில் நிறைவேற்றப்பட்டது தான். இது கூடச் சில வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். இப்படிக் காலம் கழிந்த நகும் அதன் சுவடுகள் இறுகப் பதிந்தபடி.. இவையெல்லாவற்றையும் செய்து முடித்த அந்த புண்ணியவாளன் நிறைய இது பற்றிக் கற்றிருக்க வேண்டும். அதனால் தான் இதை அதிக கரிசனையுடன் மிச்சமின்றிச் செவ்வனே செய்து முடித்திருக்கிறான்.பரிசு. பட்டங்கள், பதக்கங்களுடன்...

பிறமொழியொன்று சுவரை ஆக்கிரமித்திருந்தது.. அந்த மொழிக்கான தெளிவான விளக்கத்தைக் கேட்பதற்கு அப்போது எவரும் அங்கிருக்கவில்லை. சற்று நாட்களுக்கு முன்னர். அங்கு தங்கியிருந்து விட்டுப் போனவர்களின் கைவண்ணமாகத் தான் அது இருக்க வேண்டும். அதன் அழகு அவனை வசீகரிக்குமாப் போல் சுவரில் அழகுக்கு அழகு சேர்த்த சன்னங்கள் ஒழுங்கின்றி பரந்து பட்டுத் தெறித்தபடி.

அந்த எழுத்துக்கள் எவ்வளவு அழகாக வளைந்து நெளிந்து காட்சி தருகின்றன. அந்த மொழியின் எழுத்துக்கிருக்கும் அழகு அவர்களின் உள்ளத்தில் இல்லாமல் போயிற்றே.

அவர்களின் மொழியிற்கூட வீட்டிற்கு எப்படியெல்லாம் அழகுப் பெயர்களைச் சூட்டுகிறார்கள்? அந்த மொழிக்காரர்களுக்கெல்லாம் ஏனிவை புரிய மறுக்கின்றன. தங்களுடையவற்றை எப்படித் தம் தேசத்தில் அழகுப் பொருட்களாக்கி அழகு படுத்தி அலங்கரித்துக் கொள்கிறார்கள்?

வீடு - தங்களால் மட்டும் இழக்க முடியாதாம். பிறகு அவர்கள் மற்றவர்களின் துன்பத்தில் ஏன் இன்பம் காணுகிறார்கள்?

வீடு அம்மாவின் சீதனம். அம்மாவின் பெற்றோர் அதை மனமுவந்து தான் சீதனமாகக் கொடுத்தனர். அது பெற்றோரது படிப்படியான உழைப்பின், வளர்ச்சியின் குறியீட்டுச் சின்னம். அம்மாவுக்குத் தான் அதை வழங்கவேண்டுமென்கிற ஒரே குறிக்கோள். அது நிறைவேறியது அம்மம்மாவுக்கு மனத் திருப்தி.

வீடு தனக்குக் கிடைத்த போது அம்மா அதைத் தனக்குக் கிடைத்த பெரும்பேறாகவே கருதினாள். அம்மா தன் காலத்தில் முடிந்தவரை வீட்டைப் பாதுகாத்து அழகுபடுத்தியே வந்திருக்கிறாள்.

பிறகு, அக்கா தனக்கே அந்த வீடு உரித்தாகப் போவதான பாவனையில் செயற்பட்டாள். அந்த வீடு தனக்கே வேண்டும் என்கிற அவா அவளிடம். வீட்டை அழகாக வைத்திருப்பதே அவளுடைய முதல்தர வேலை. மனதிற்கு இதம் தேடி எந்தநேரமும் அவ்வப்போது வெளி வந்து கொண்டிருக்கும் புதிய பாடலை முணுமுணுத்தபடியே எல்லா வேலையையும் செய்வாள். சமையல் அறையின் வேலையிலிருந்து முற்றம் கூட்டும் வரையிலும் அவளது வாய் ஓயாது. தம்பி இடையிடையே குறுக்கிட்டு அக்கா பாடும்போது தன் வாய்க்குவந்தபடி பாடித்தள்ளுவான். ஆனால் அக்காவுக்கு அருகில் இருக்க மாட்டன். சிலசமயங்களில் அக்காவின் கைகளில் இருப்பவை அவனைத் துரத்திச் சென்று பதம் பார்க்கும்.

அவள் தன் இஷ்டப்படியே எல்லாவற்றையும் செய்து முடிப்பாள். பிடிவாதக்காரப் பெண். ஒருத்தரும் என்ர வேலையிலை பங்கெடுக்கத் தேவையில்லை. என்ர வேலை எனக்குத் தெரியும் என்று எல்லோரையும் தடுப்பாள். அதனால் அவளது செயலில் எவரும் தலையிடுவது மிகக் குறைவு.

மூத்தவளுக்குத்தான் வீடு குடுக்கவேணும். பெடியளுக்கு என்னத்துக்கு வீடு. அவங்கள் தாங்களே தேடிக் கொள்வாங்கள் அம்மாவும் அப்பாவும் குசுகுசுத்தபோது அது அவளின் காதில் விழுந்திருக்க வேண்டும். அதனால் தான் வீட்டின் மீது அவளுக்கு கவனிப்புக்கள் இப்படி அதிகமாயிருந்தன.

அக்கா தனக்காய் சீதனமாய்ப் பெற்ற வீடு, திருமணமாகி மூன்று வாரந்தான் அதிலிருந்தாள். நாலாம் வாரம் அதைத் தனிக்க விட்டு ஊரோடு கூடி அக்கா, அத்தான், அம்மம்மா, அப்பா, அம்மா, தம்பி.. அவன் எல்லோரும் கூடவே ஓடினர். அந்த வீட்டைப் பிரிந்து எங்கோ தொலைவில் விழித்திருந்த நீண்ட பொழுதுகள்.. எங்கோ ஒரு திண்ணையில் குந்தியிருந்து வீட்டின் நினைவில் சங்கமித்தபடி எல்லோரையும் நினைவுகளும் மூழ்கித் தவிக்கும்

காலங்கள் நீட்சியாகக் கரைந்தன. உயிர்க்கூடுகள் அங்கு மிங்குமாக அந்தரித்தலைந்தன. வாழ்க்கை பெரும் சுமையாகியது. பொழுதுகள் ஒவ்வொன்றும் விடியாதவையாகவே இருந்தன. குடும்ப அங்கத்துவ எண்ணிக்கைகள் இறங்கு வரிசையில் சென்று கொண்டே....

அவன் பிறந்து மூன்றாவது மாதத்திலேயே அம்மப்பா பரலோகம் போய் விட்டாராம். அவரது முகம் தெரியாத பருவம். பின்னாளில் வீட்டின் சுவரில் அவர் புகைப்படமாக காட்சியளித்ததை த்தான் அவனால் பார்க்க முடிந்திற்று. அவர் தான் அந்த வீட்டைக் கட்டியதாக அம்மம்மா கூறினாள்.

அதற்கு அவரது உழைப்பு அதிகமாகவே இருந்தது. வீட்டிற்கான நிலையம் பார்ப்பது, அத்திவாரக்கல் போடுவதிலிருந்து கூரைக்கு ஒடு போடும்வரை தான் ஒரு வேலையாளாகவே செயற்பட்டாராம். எப்படி அதை நல்லபடி அமைக்க முடியுமோ அதுவே அவரது முழுமூச்சு.

சாமிப்பட அறைக்கு வேப்பம் பலகையில தான் கதவு அலைந்த இடம் கொஞ்சமல்ல. இதை அம்மாவின் வாயிலிருந்து அவன் புரிந்து கொள்ள முழந்தது. வீட்டைக்கட்டி முடிக்க எவ்வளவு பணம் செலவாகியிருக்கும்!

எவ்வளவு காலம் பிடித்திருக்கும்! நிறையச் சிரமங்களுக்கு மத்தியில் தான் கட்டி முடித்திருப்பார். தான் கட்டிய வீடு, அதில் தான் உயிர் பிரிந்தாக வேண்டும் என்கிற அவா அது நிறைவேறியது. அம்மப்பா வாழ்வில் முழுவதையும் நிறைவாக்கிய வெற்றிதான்.

வீடு கட்டி முடிந்த களையோட களையா நல்ல நாள் பார்த்தாராம் அம்மப்பா குடிபுகுதலுக்கென்று சின்னப்புச் சாத்திரியார் தானாம் அப்ப வலு கெட்டிக்காரன்.சொன்னால் தவறாத சோதிடக்காரன் அவரென்று அம்மம்மா அடிக்கடி சொல்லுவா. அம்மப்பா நாள் குறிக்கப்போனதும் சின்னப்புச் சாத்தியாரிட்டத் தான். புது வீட்டுக்குச் சோமச்சு அலங்காரம் பண்ணினது கட்டைராசுவாம். கட்டை ராசு கைபட்டால் காணும் காட்சி நூறு கோடி. வெளிவாசல்ல வாழைக்குலைகள் கட்டினதைப்பற்றி ஊரெல்லாம் பல நாள் திகைச்சுக் கதைச்சதாம்.நீர்வேலிக்குலையளை வண்டில் கட்டிப் போய் ஏத்திக் கொண்டு வந்து கட்டினாராம் கிழவர். சாமம் பொழுதென்று பாராமல் கிழவர் உழைத்த உழைப்பை அம்மம்மாவும் அம்மாவும் குரல் தளுதளுக்கக் கூறக் கேட்டிருக்கிறான். புது வீட்டுக்கு வந்த சனம் வீட்டைச் சுத்திப் பார்த்துக் கதைச்ச கதையளை அம்மம்மா எப்படி மனப்பாடமாக்கி வைத்திருந்தா என்று அவனுக்கு ஆச்சரியம்!. வீட்டுக்குப் பெயின்ற் அடிச்சது நாகநாதி, அதுக்குப் பிறகு நாகநாதியின் மவுசு இயக்கச்சி வரைக்கும் பரவிச்சு என்றா அம்மம்மா. அந்த வீட்டைப்பார்த்து அயல் ஊர்களில் கூட அதுமாதிரிக் கட்டினார் களாம் பலர். புது வீட்டுப் போட்டோ கூட பல காலம் பத்திரமாகக் கிடந்தது.

புதுசாக் கட்டின வீட்டில் முதல் காரியம் நடக்கப் போகுது. அவளுக்கெண்டு கட்டின வீடு எவ்வளவு செலவழிஞ்சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் பரவாயில்லை. பெரிசாத்தான் கலியாணத்தைச் செய்ய வேணும் என்று அம்மப்பா சொல்லி ஏற்பாடு நடந்ததாம். இந்தத் தடவை நாகநாதியோடு மகனும் வந்து வர்ணம் பூசினான். கட்டை ராசுவிற்குப் பதிலாக அம்மாவின் சிநேகிதிகளும் உறவுக்காரப் பெடியங்களும் வந்து அலங்காரம் செய்தார்களாம். பெண்பார்க்க வந்த அப்பா வீட்டையும் பார்த்து வியந்தாராம். என்னை முதல் பிடிச்சுதோ இல்லை வீட்டை முதல் பிடிச்சுதோ? என்று அம்மா பல தடவை அப்பாவைக் கேட்டது அவனுக்கு ஞாபகம். அம்மாவின் கல்யாணத்தோடு திரும்பவும் வீடு புதுக்கோலத் தில் திளைத்தது. எந்தக் காலத்துக்கும் பொருந்தக் கூடிய பாஷனில் வீட்டை அம்மப்பா கட்டியிருந்தார். வீட்டுக்குப் பிளான் கீறினது மலாயன் பென்சனியர் ஒருத்தராம். கல்யாண போட்டோவுடன் வீட்டையும் ஒரு தனிப்படம் எடுக்கவேணு மெண்டு எடுத்துக் கொண்டாளாம் அம்மா. அப்பாவுக்கும் கூட அது தனிச் சந்தோசம் தான்.

அக்காவின் சாமத்தியச் சடங்கு பிறகு கலியாணம் என்ற போதெல்லாம் புதுக் கோலம் பூண்டது வீடும் தான். அக்காவை பெண் பார்க்க வந்திருந்த அத்தான் இந்த வீடு எப்ப கட்டினது? என்று கேட்டது அம்மம்மாவுக்குத் தனி மகிழ்ச்சி. சோக்கான பெடியன் வனு கெட்டிக்காரன் போல கிடக்கு எனக்கு நல்லாப் பிடிச்சுப் போச்சுது பெடியனை வீட்டுக் கதை கதைத்தவுடனேயே அத்தானை அம்மம்மாவிற்கு எந்த விசாரணைக்கு மப்பால் பிடித்துக் கொண்டது. இந்தக் கலியாணத்திற்கு வீடு காலத்தோடு மாறி இளமையாகியிருந்தது. புதிய குளிர்ச்சியான நிறம். சரிகையின் மினுமினுப்பாய் ஒளிரும் அலங்காரம். வெளிநாட்டுப் பொருட்களால் அக்கா சிருங்காரித்திருந்தாள். பூங்கன்றுகளின் நளினம் அது ஒரு புதுப்பெண்ணின் நிறைவோடிருந்தது. கல்யாணப் படங்களோடு வீடியோவிலும் அது தன்னைப் பதித்தது.

நிலாக்காலங்களில் முற்றத்தின் முன்னே அது மோனத்தில் கிடக்கும். வெளியில் நின்று ஒரு தலமாக உருகும். மழை நாட்களில் கிறக்கத்துடன் மழையில் நனையும். அவனுக்குக் கத்தி அழவேண்டும் என்றிருந்தது. குரல் நடுங்கித் துடித்தது. கண்களில் நீர் திரண்டு வழிந்தது.

அம்மா அக்காவுக்கு வீட்டைச் சீதனமாக்கிய பிறகும் அது தனக்கானதல்ல என்ற நினைப்பேயின்றி அழுது புலம்பினாள். அக்காவுக்கும் அத்தானுக்கும் தம் சொத்துப் பறிபோயிற்றே என்ற ஆறாத மனத்தவிப்பு. காலம் சலிப்புத் தட்ட வீட்ட போகக்கூடிய நிலமை வந்தால் நீங்கள் என்ரை வீட்டில போயிருங்கோ. பிரச்சனை தீர்ந்தாப்பிறகு நாங்கள் இஞ்சாலுக்கு வாறம். அதுவரைக்கும் நாங்கள் அங்கால போகப்போறம் என்று கூறி இந்த மண்ணின் வாடை பிடிக்காதபடி வெளிநாடு போயினர் அக்காவும் அத்தானும். அத்தான் தன்னுயிரைப் பற்றித் தான் எப்பவும் நினைப்பவராச்சே. உயிர் உடலை விட நேரிட்டாலும் என்ற பயப்பீதி. இதனால் தான் மனம் அவரை வேறு வழிக்குத் திசை திருப்பியிருக்க வேண்டும். வெளிநாடு சென்ற பிறகு அவருக்கு உயிர் பற்றிய பிரச்சினை இருக்கவில்லை.

வெளிநாடு சென்றபிறகு அக்கா எழுதும் கடிதம் ஒவ்வொன்றிலும் அடிக்கடி எழுதிக் கொள்வது தன் வீடு பற்றித்தான். நிலைமை எப்படியிருக்கிறது? என் வீடு எப்படி? ஏதாவது சேதம் ஏற்பட்டுள்ளதா? வீட்டிற்குப் போய் வரக்கூடிய நிலைமை இருக்கிறதா? வெகுவிரைவில் போய் இருக்கலாமா? இவை தான் கடிதத்தை நிறைத்திருக்கும்.

இவைகளைப் பற்றி அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது? அவளது கேள்விகள் நியாயமானவை தான். இவற்றுக்கான பதிலை எப்படி வரையறை செய்வது? இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து இந்தப் போருக்குள்ளேயும் வாழ்ந்த பெண் போரின் இழப்புக்களை எல்லாம் கண்ணெதிரே கண்டு கொதித்தவள் இப்போது ஒன்றுமே புரியாதவளாகி.....

அவனுக்கு அக்காவை நினைக்கப் பரிதாபமாக இருந்தது!. ஒன்றும் விளங்காதவளாக, நிலைமை புரியாதவளாக இருக்கிறாளே என்ற பார்வை அவளில் வீட்டார் எல்லோருக்கும். அக்காவின் மனம் அமைதி பெற வீட்டுக்கு பிரச்சனை வராது போய் வருவது தான் சிரமம். பிரச்சனை சற்றுக் குறையும் போல் தெரிகிறது. தீர்ந்தால் போய் விடுவோம். அவன் மறுபதிலை எழுதி அனுப்பி விடுவான் ஒரு சமாதானத்திற்கு. அக்காவின் அக்கறை வெளிநாடு சென்றபிறகும் வீட்டின் மீது தான். அத்தானும் தன் சொத்தில் அதிக கவனம்.

வெளிநாடு சென்றபிறகு எவருக்குமே வராத அக்கறை இவர்களுக்கு மட்டும் ஏன் இப்படி வனுவாக.....

அந்த வீடு தங்களுடையது தான் என்பதனை ஞாபகப் படுத்தலாகவும் அது இருக்கலாம். அவன் எண்ணிக் கொண்டான். அம்மம்மா தன் சொத்து மூன்றாவது தலைமுறைக்கு மாறி விட்டதான மனத்திருப்தியில் வாழ்ந்தாள். பிறகு வீடு இழந்த துயரில் நோய் பிடித்து உயிர் துறந்துஅவளது கனவுகள் கரைந்து போனதெண்ணி அம்மா சாவீட்டில் புலம்பித் தள்ளினாள்.

அம்மம்மாவின் பொக்குவாய் நிரம்ப வெற்றிலை பாக்கு. கடவாயில் இருந்து சிவப்புச் சாயம் வழியப் புறுபுறுத்தபடி எப் போதும். அவள் தன் கை பொத்தி வீட்டின் நிலைதிராமல் பாக்குர லில். பாக்கிடிக்கும் அழகு. அதுவே ஒரு தனி ஞாபகம்.

அம்மம்மா பாக்கிடிக்கும் போது நிலத்தில் குழி விழுந்து போகுமென அக்கா புறுபுறுப்பாள். அவள் தன் பொக்கு வாய் திறந்து

என்ர புருஷன் கட்டின வீடு அதில எனக்குத் தான் முதல் பங்கிருக்கு அம்மம்மாவின் வார்த்தைகள் அக்காவை சுடுமாப் போல் இருக்கும். அக்கா அம்மம்மா அறைஎ பேந்து போய்க் கதைக்கிற கதை தான் இதுவென்று வேறு கதையின்றி ஒதுங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

வீட்டின் மூலையில் இறுதிவரை தன் கணவர் படுத்துறங்கிய கட்டிலிலே தான் அவளது படுக்கை. நான் இந்த வீட்டில தான் சாகவேணும் என்ரை மனுசன் சாகும் வரைக்கும் வாழ்ந்த இந்த மண்ணில தான் என்ரை உயிரும் போகவேணும். நான் செத்தாப் பிறகு என்ர படத்தை அவற்றைப் படத்துக்குப் பக்கத்திலை தான் தூக்க வேணும். இவைகள் தான் அவளது வாய்ச் சொற்களில் அதிகம் ஒலிப்பவை. அவளது ஆசைகள் நியாயமானவை. ஆயினும் ஒன்று கூட நிறைவேறாமல் போனது மனதுக்கு இழப்புத்தான்.

அவளது கனவுகள் அவற்றிற்கு எவராலும் வலுச்சேர்க்க முடியாமல் போயிற்று. அப்பாவுக்கு அவளது கணக்குப் பிசகி விட்டதான கவலை. அப்பா அந்த வீட்டின் முன்னைய காலத்தை பெரும்பேறாகவே கருதி வாழ்ந்தார். அதன் உறவில் நிம்மதி அடைந்திருந்தார். அது மலையேறிப் போனதான நினைப்பு. இருந்தும் எப்பவும் வெகுவிரைவில் போய்விடுவோம் என்கின்ற நம்பிக்கையில் திளைத்திருந்த காலம். அப்பா அவனை தன் பிரதிநிதியாக்கி விட்டு கண்காணாத தேசத்துக்குப் போய் விட்டார். மாமா வீட்டுக்குச் சென்றுவரும் வழியில் குண்டொன்றின் அதிர்வில் அவர் இதயம் இறந்தது.

மூக்கினாலும் காதினாலும் குருதி வழிந்தபடி நடுவீதியில் அப்பாவின் சாவு. எல்லோருக்கும் திகைப்பாகவே இருந்தது. கடும் உழைப்பு, எதிலும் விடாமுயற்சி, ஐம்பது வயது தாண்டாத துடிப்பு எல்லாம் அடங்கிப் போனதாய்.

அம்மா காலத்துக்குக் காலம் வரும் இழப்புகளுக்கெல் லாம் துவண்டு போனாள். அவளது வாழ்வு ஒடுங்கிப் போனது. இழப்புகளே வாழ்வாகிற்று. சதா வேதனையோடு அவள் வாழ்வு.

யாரால் என்ன செய்ய முடியும் இதற்கு? ஆறுதல் அது கூட சிறிது காலத்திற்குத்தான். தம்பி துள்ளித்திரிகிற வயதில் அந்த வீட்டின் முகட்டிலெல்லாம் பம்பரமாய் சுழன்றடித்தான். வீட்டை அலங்கோலம் செய்வது அவன்பணி. அதற்குப் பிறகு அக்காவிடம் என்னம் பறக்க வேண்டித் தள்ளுவது அதற்கான பரிசு. வீட்டை இழந்து வந்த பிறகு அப்பாவின் அடி உதைகளுக்கெல்லாம் தப்பித்துக் கொள்ள மறைவிடமின்றித் தவித்த காலம்....

ஒரு நாள் தம்பி எவருமே அறியாதபடிக்கு எங்கோ போய் விட்டான். பலநாட்களின் அலைவுகளுக்குப் பிறகு தான் அவன் போன வழியை அறிந்து கொள்ள முடிந்தது.

தன் ஊர், சுற்றம்,வீடு எல்லாம் இழந்து போனது அவனுக்கு ஏதோ உணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்த விளைவின் முடிவு தான் அது. பின்னர் இராணுவத்துடனான சண்டையொன்றின் பின் மரணித்த செய்தியுடன் அவனுடைய உடலை மட்டும் தான் காண முடிந்தது. குடும்பத்தைச் சந்திக்காத அந்த நான்கு வருடத்தில் அவன் தன்னால் முடிந்தவற்றைச் சாதித்திருப்பான்.

தம்பியை இழந்த கவலை வாட்டிற்று அம்மாவுக்கு. இன்னும் அதிகமாகவே... எனினும் தம்பியின் இழப்பு நியாயத்திற்கானது. அவனை நினைத்தால் இப்போது நிம்மதிப் பெருமூச்சு அவனில்.

அது ஜடம். உயிரற்ற கற்குவியல்களின் கூட்டம். இனி எதையுமே அதனிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அதற்காக உழைக்க நீண்ட காலம் தேவைப்படும். அதற்கு உயிரூட்ட, உயிராய் அதனோடு வாழ எவ்வளவு காலம் வேணும். அதை மீள் நிலைக்கு எப்படிக் கொண்டுவர முடியும்?

அவன் தனித்த ஒண்டிக்கட்டை அவனால் என்ன செய்ய முடியும்?

அவன் நிதானமாகவே சிந்தித்துச் செயற்பட விரும்பினான் முதலில் அக்காவுக்கும் அத்தானுக்கும் ஒரு நீண்ட கடிதம் எழுதுவதா?

தன் சொத்துச் சொத்தென்று வாழ்ந்த அக்கா, அவள் எப்படி இந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ளப் போகிறாளோ! அவளது மனம் நிலையின்றிச் சுழன்றடித்தது. ஒரு புயற்காற்றாய்.

வீட்டை விட்டு ஓடிப் போன போது பசுமாடு கட்டையில் கட்டியிருந்தது.... நாய் தாழ்வாரத்தில் குழிதோண்டி குடங்கிப் படுத்திருந்தது. ... சுவரில் தொங்க விடப்பட்டிருந்த அம்மப்பாவின் உருவப்படம்.... அம்மா அப்பாவின் திருமண வாழ்த்து மடல் இவையெல்லாம் எங்கு போயினவோ! இவற்றை எங்கு தேட முடியும்?

அம்மப்பாவின் புகைப்படமொன்று மாமாவிடம் இருக்க வேண்டும். மற்றவைக்கு என்ன செய்வது?

முதலில் அந்த நிலத்தில் கொட்டில் போட்டுக் கொள்வது அதன் பிறகு அம்மப்பாவின் உருவப்படம். அதற்கருகில் அம்மம்மாவினது... அப்பாவினது... தம்பியினது... எல்லாவற்றையும் நிரையாகவே தொங்க விட வேண்டும்.

- மட்டுவில் ஞானக்குமாரன் -

## அவர் மட்டும் வாழ்ந்தால் போதுமா?



வாழ்க வாழ்கவென
சுவர்களின் முதுகுகளிலே
சுவரொட்டிகள்.

முதுகுவலிக்க ஒட்டியவனும்
வாய்கிழிய கத்தியவனும்
பத்தீயெரியும் வயிறுடன்
துடித்துக் கொண்டிருக்கிறான்

படங்களில் கூட தலைவர்கள்
சிரித்தபடியேதான் இருக்கிறார்கள்
தொண்டன் மட்டும்
எரியும் வயிறுடன் வாழ்க வாழ்கவென
கத்தியபடியேதான் இருக்கிறான்.
வாழ்த்தும் அவர்கள் தான்
எப்போது வாழ்வதென
தெரியாது இருக்கிறார்கள்

வாழ்க வாழ்கவென
நாடு முழுவதிலும் சுவரொட்டிகள்
தலைவன் மட்டும் வாழ்ந்தால் போதுமா?

## நீதி மிருகத்துள்ளே தேடுகிறான் அந்த சாகத சாதீயை!

ஒன்றாகிப் படைத்ததை
வேறாக்கிப் பார்கிறான்
மனிதன்
அனைத்தையும் சேறாக்கிப் பாரக்கிறான்.

எருமையும் பசுவைப்போலவே
ஒன்றையே தருகிறது.
இருந்தாலும்
இறந்தாலும்
நன்றையே தருகிறது
மனிதன் மட்டும் இரண்டையும்
வேறாக்கிப் பார்கிறான்

பாலையும் தோலையும்
தருவுக்கு எருவையும் தருகிறது எருமை
ஆனாலும் ஏனோ தெரியலை
எருமையை ஒதுக்கிவிடுகிறோம்.

பசுவின் சிறுநீர்
கோமயமாக்கி பருகினோம்
எருவை திருநீறாக்கி தலையிலே பூசினோம்
எருதை சிவனுக்கும்
எருமையை எமனுக்கும் வேறுபடுத்தினோம்

எருமை என்பது ஏழைகள் போல
சேரிக்குள்ளும்
சேறுக்குள்ளும் ஒன்றெனக் கலந்ததால்
வேறாக ஒதுக்கினோமோ.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்களுக்கு வந்த வருத்தம்

## முறையற்ற இடமாற்றம் தரப்போகும் விபரீதம்

யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் 188 மருத்துவ அதிகாரிகளில் 87 பேருக்கு இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. இரத்த வங்கியில் இருக்கின்ற சகலரும் இடமாற்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் மயக்க மருந்துப்பிரிவில் ஏற்கனவே தேவையான 52 பேரில் 24 பேர் மட்டுமே உள்ள நிலையில் 11 பேர் இடமாற்றப்பட உள்ளனர். சத்திரசிகிச்சைப் பிரிவில் உள்ள 16 பேரில் 10 பேர் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களில் 24 பேர் கடந்த 30ம் திகதியிலிருந்து பதிலீடு ஏதுமின்றி இடமாற்றத்துக்காக விடுவிக்கப்பட்டுள்ளனர். வடமாகாணத்தின் ஒரே ஒரு மூன்றாம் நிலை வைத்தியசாலையான யாழ் போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே 140 க்கு மேற்பட்ட வைத்தியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது. இந்நிலையில் இவ் இடமாற்றத்தின் பின்னணியை ஆராய்கின்றது இக் கட்டுரை.

இடமாற்றம் பெற்றுள்ள வைத்தியர்கள் அனைவருமே மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். உதாரணத்துக்கு சத்திர சிகிச்சைப்பிரிவில் இருக்கும் இடமாற்றம் பெற்றுள்ள வைத்தியர்களின் பங்களிப்புடனேயே இலங்கையிலேயே மிகக்குறைந்த கால காத்திருப்புடன் சத்திர சிகிச்சைகளை இங்கு செய்ய முடிகிறது. சத்திர சிகிச்சை பிரிவுகளில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் அனைவருமே ஒட்டுமொத்தமாக இடமாற்றப்படவுள்ளனர். இவர்களுக்குப் பதிலாக புதிதாக நியமனம் பெறவுள்ள வைத்தியர்களுள் 58 பேரை நியமிப்போம் என வாக்குறுதி தரப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதியை நம்பி இடமாற்றம் பெற்றுள்ள 87 பேரையும் உடனடியாக விடுவிக்கமாறு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினாலும் சுகாதார அமைச்சினாலும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் புதிதாக வரும் 58 பேரில் எவரும் வெற்றிடமாக உள்ள 140 இடங்களுக்கு நியமிக்கப்படப்போவதில்லை. மேலும் புதிதாக அனுப்பப்படவுள்ள 58 பேரில் எத்தனை பேர் உண்மையில் நியமனம் பெறுவார்கள் என்பதும் யாருக்கும் தெரியாது. ஆகவே ஒட்டுமொத்தமாக ஈற்றில் புதிதாக உருவாகும் 30க்கும் அதிகமான வைத்தியர்களுக்கான வெற்றிடங்களுடன் மொத்தமாக 170 வெற்றிடங்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் நிலவப்போகிறது

இந்த 58 பேரும் முழுவதுமாக நியமிக்கப்பட்டாலும்கூட ஏற்படவுள்ள 87 வெற்றிடங்களையும் மற்றும் சேவைகளின் தரத்தில் ஏற்படப்போகும் வீழ்ச்சியையும் புதிதாக நியமனம் பெறும் இவ் வைத்தியர்களால் முழுமையாக நிரப்ப முடியாது. ஏனெனில் இவர்கள் உரிய அனுபவங்களைப் பெற குறைந்தது 1 - 2 வருடங்கள் வரை செல்லும்.

சுகாதார அமைச்சின் நடைமுறையின்படி வட கிழக்கில் புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்கள் ஒரு வருடத்துடன் தெற்கில் உள்ள பிரபல வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இடமாற்றம் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இங்கு சுய விருப்புடன் தொடர்ந்து சேவையாறறும் வைத்தியர்களை இடமாற்றம் செய்துவிட்டு, ஒரு வருடத்தில் விரும்பினால் இடமாற்றம் பெறத்தகுதியானவர்களே நியமனம் பெறவுள்ளனர்.

மேலும், உண்மையாக 58 பேரை நியமித்தாலும் இவர்களில் எத்தனை பேர் வடக்கு கிழக்குக்கு என மட்டுமே உள்ள விசேட வட – கிழக்கு இடமாற்ற முன்னுரிமைத் திட்டத்தின் கீழ் ஒரு வருடத்தில் வெளியேறப் போகிறார்கள் என்பது இப்போது தெரியாது. வடக்கு - கிழக்கு குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசம் இப்போதும் தமிழ் வைத்தியர்கள் உட்பட, வைத்தியர்கள் மத்தியில் பணியாற்ற விரும்பத்தகாத இடமாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே அடுத்த வருடத்தில் ஒரு வருட சேவையுடன் வெளியேறும் புதிய வைத்தியர்களைப் பதிலீடு செய்யவே புதிய நியமனங்கள் வழங்கப்படும். ஏற்கனவே கூறியதுபோல் இந்த 58 பேரும் வருடாந்த இடமாற்றம் பெறுபவர்களை பதிலீடு செய்யவே நியமிக்கப்படுவதால் இப்போது உள்ள 140 வெற்றிடங்கள் ஒரு போதும் நிரப்பப்படப்போவதில்லை. இதய சிகிச்சைப்பிரிவு, நரம்பியல் சத்திர சிகிச்சைப்பிரிவு, மயக்கமருந்துப்பிரிவு போன்ற பல்வேறு முக்கியமான பிரிவுகளில் நிலவும் பாரிய ஆளணிப்பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவப்போகிறது. ஏலவே புதிதாக நியமனம் பெற்ற நரம்பியல் சத்திர சிகிச்சைப்பிரிவு நிபுணரை, அவரது பிரிவுக்கென யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகம் துணை வைத்திய அதிகாரிகளை வழங்காமையால் கொழும்புக்குத் திரும்பி வருமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு மட்டுமன்றி ஓட்டுமொத்தமான இடமாற்றத் திட்டமொன்றை இவ்வருடம் சுகாதார அமைச்சு இலங்கை முழுவதும் அமுல்படுத்தியிருக்கின்றது. ஆனால் ஏனைய வைத்தியசாலைகளில் யாழ்ப்பாணத்தில் உள்ளது போல் வைத்தியர்களுக்குக் கடும் பற்றாக்குறை நிலவவில்லை. மேலும், அங்கெல்லாம் இடமாற்றம் பெறுபவர்களின் வெற்றிடங்கள் வேறு வைத்தியசாலைகளிலிருந்து இடமாற்றம் பெறுகின்ற அனுபவமுள்ள வைத்தியர்களாலேயே நிரப்பப்படுகின்றன. அப்படி இருந்தபோதும் கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை, லேடி றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை போன்றவற்றிலும் கடும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சத்திரசிகிச்சைப்பிரிவு, தீவிர சிகிச்சைப்

**– கரிகாலன் –**

பிரிவு போன்ற பிரிவுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவை ஏன் இப்படி ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது? முதலாவதும் முக்கியமானதுமான காரணம் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்திற்கு இடமாற்ற விதிகளின் மீது திடீரென ஏற்பட்ட அதீத அக்கறையே ஆகும்.

கொழும்பில் உள்ள சில போதனா வைத்தியசாலைகளில் இயங்கும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கக்கிளைகளில் இருந்தவர்கள் தமக்கு எதிரானவர்கள் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தாய்ச்சங்கம் கருதியமையே இந்தத் திடீர் அக்கறைக்குக் காரணமாகும் என பேசப்படுகின்றது. இதைவிட தற்போது கல்வி, வைத்திய சேவை போன்றவற்றைத் தனியார் மயமாக்க விரும்பும் அரசுக்கு இப்படியான குழப்பங்களை ஏற்படுத்தி அரச சுகாதார சேவைகளில் மக்களுக்கு உள்ள நம்பிக்கையைச் குழப்புவதும் திட்டமாக இருந்திருக்கலாம்.

ஆனாலும் சுகாதார அமைச்சினதோ, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினதோ இந்த இடமாற்றத்திட்டத்தில் யாழ் போதனா வைத்தியசாலையையும் உள்ளடக்கிய பெருமை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் கிளையின் செயற்குழுவிற்கே சாரும். இக்குழுவின் தலைவரும் துணைச்செயலாளரும் பல்வேறு தனிப்பட்ட நலன்களுக்காக இந்தப் பாவகாரியத்தைச் செய்துள்ளார்கள். கடந்த வருடம் இதே காலப்பகுதியில் இதே தலைவர்

### எக்ஸ்ரே றிப்போட்

அமைச்சுக்கும், சங்கத்துக்கும் எழுதிய கடிதத்தில் யாழ் போதனா வைத்தியசாலையில் நிலவும் வைத்திய அதிகாரிகளுக்கான தட்டுப்பாட்டைப்பற்றி நன்கு சரியாக விளக்கியிருந்தார். ஆனால் இம்முறை இதே தலைவரும் அவரது கையாள்களும் ஒழுங்கற்ற இடமாற்றம் என்ற இக்கட்டான நிலையை யாழ் போதனா வைத்தியசாலையில் உருவாக்கியுள்ளனர்.

இந்த ஆபத்தான நிலைமையை உருவாக்கியதில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் போதனா வைத்திய சாலைக் கிளையின் தலைவர் டாக்டர் நிமலன், துணைச் செயலாளர் டாக்டர் ராகுலன், கொழும்பில் பணியாற்றிக்கொண்டு வடக்கிற்கான இணைப்பாளர் என தனக்குத்தானே பதவி ஏற்படுத்திக் கொண்ட டாக்டர் சாயிநிரஞ்சன், மற்றும் சிலருக்கும் பங்குண்டு. யாழ் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர், சில புகழ்பெற்ற வைத்திய நிபுணர்கள், மற்றும் தமக்கு சங்க நிர்வாகத் தெரிவில் தமக்கு வாக்களிக்காதவர்கள் எனக்கருதும் வைத்தியர்கள் மீதான இவர்களின் தனிப்பட்ட காழ்ப்புணர்வை வெளிக்காட்ட இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விழைகின்றனர். இந்த மன நிலையினாலேயே இவர்கள் தொடர்ந்தும் போதனா வைத்தியசாலையைச் சீரழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதில் ஒரு கட்டமே இந்த இடமாற்றங்களுமாகும்.

நாடு முழுவதும் செய்யப்படும் இடமாற்றங்கள் பாரபட்சமின்றி இங்கும் செய்யப்பட வேண்டும் என்பதே இந்தக்குழு முன் வைக்கும் (விதண்டா) வாதமாகும்.

ஆனால், சுகாதார அமைச்சோ, அரசாங்க வைத்திய் அதிகாரிகள் சங்கமோ இதுவரை வடக்கு, கிழக்கைத்தீவின் ஏனைய பகுதிகளுக்கு சமமாக கருதியதில்லை. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயேபுறக்கணித்து வருகின்றனர். இப்படித் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கை புறக்கணித்து வந்ததாலேயே இப்பிரதேசங்களின் வைத்திய சேவை மிகவும் சீர்குலைந்து போயுள்ளது. இதுவரை காலமும் குறைந்தளவு வைத்தியர்களாவது தன்முனைப்புடன் யாழ் போதனா வைத்தியசாலையில் சேவை செய்ய முன் வந்ததாலேயே யாழ் போதனா வைத்தியசாலையின் சேவை ஓரளவுக்கு தானும் பேணப்பட்டு வந்தது.

இந்த நிலையில் திருமதி நவநீதம்பிள்ளை யாழுக்கு விஜயம் செய்த நேரத்தில் மற்றும் வட மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவிருந்த தருணத்தில் திடீரென 06 வைத்தியர்களை யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து யாழில் உள்ள சிறு வைத்தியசாலைகளுக்கு பதிலீடு ஏதுமின்றி இடம்மாற்ற சுகாதார அமைச்சும், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கமும் முயன்றன. இந்த திடீர் இடமாற்றங்களை அமுலாக்க கொழும்பில் பணியாற்றும் வைத்தியர் சாயிநிரஞ்னை வட மாகாணத்திற்கான பிரதிநிதி என்ற பெயரில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அனுப்பி வைத்தது. வந்தவர் இங்கிருந்த தலைவர், துணைச்செயலாளர் ஆகியோரின் துணையுடன் அடாவடியாக நடந்து கொண்டு தமக்கு எஜமானர் களால் வழங்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற முயன்றார். ஆனால் வைத்தியர்களின் சமயோசிதத்தால் இவரது முயற்சி அப்போது தடைப்பட்டது. ஆனாலும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க தாய்ச்சங்கமும், உள்ளூர்க் கிளையும் தமது முயற்சிகளைத் தொடர்ந்து செய்தனர். அடிக்கடி பணிப்பாளரைத் தொலை பேசி மூலம் மிரட்டவும் செய்தனர்.

இவர்களின் தவறான நடவடிக்கைகளில் விரக்தியுற்ற துணைத்தலைவர், செயலாளர் உட்பட 7 பேர் ஒரு கிழமைக்கு முன்னரே பதவி விலகியுள்ளதாக தொழிற்சங்கமல்லாத வகையில் கூட்டிய வைத்தியர்களின் கூட்டத்தில் கூறினர். தொடர்ந்து கடந்த 23.09.2013 அன்று யாழ் போதனா வைத்தியசாலையின் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கக் கிளையின் தலைவர் டாக்டர் நிமலனுக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை மூன்றில் இரண்டுக்கு பங்குக்கு மேற்பட்ட வைத்தியர்கள் கையெழுத்திட்டு சங்கத்திடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து யாழ் போதனா வைத்தியசாலை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்ககிளை செயலிழந்ததாக அறிவித்து அதற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றும் யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் உருவாக்கப்பட்டது. ஆனாலும் வைத்தியர் நிமலன் தானே தலைவர் என தொடர்ந்தும் அடாவடியாக இயங்கினார்.

இந்த நிலைமையால் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என அச்சமுற்ற வைத்திய நிபுணர்களும், பணிப்பாளரும் 26.09.2013 அன்று சுகாதார அமைச்சின் செயலாளரை சந்தித்து நிலைமையை விளக்கினர். தெற்கில் மேலதிக வைத்தியர்கள் உள்ள வைத்தியசாலைகளில் செய்வது போல் இடமாற்றங்களை யாழ்போதனா வைத்தியசாலையில் அதிரடியாகச் செய்ய முடியாது என்பதை செயலாளரும் ஏற்றுக்கொண்டார். மேலும் தெற்கிலுள்ள வைத்தியசாலைகளில் இருந்து இடமாற்றம் பெறுகின்ற வைத்தியர்களுக்குப் பதிலாக அனுபவம் உள்ள வைத்தியர்களே பதிலீடாக வரவுள்ளனர் என்ற வேறுபாட்டையும் ஏற்றுக்கொண்டார்.

நடைபெற்ற கலந்துரையாடலின் பின் செயலாளர் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு இடமாற்றங்களை அமுல் படுத்தும்போது வைத்தியசாலையின் சேவைகள் பாதிப்புறாதவாறு பார்த்துக்கொள்ள அதிகாரமளித்தார். மேலும் பதிலீடாக வரும் வைத்தியர்கள் உரிய அனுபவம் பெறும் வரை இடமாற்றங்களை அமுல்படுத்தத் தேவையில்லையெனவும் படிப்படியாக அமுல்படுத்தினால் போதுமெனவும் அறிவுறுத்தினார்.

இந்த இடமாற்றங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் யாழிலுள்ள சிறிய வைத்தியசாலைகள் பயனடையும் என்பது உண்மைதான். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக அமைப்பின்படி, மாற்றம் பெறும் வைத்தியர்களுக்கு அனுபவம் இருந்தும் அந்தந்த வைத்தியசாலைகளுக்குரிய மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அங்கு சேவைகளை வழங்க முடியும். ஆனால் அவர்களால் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க போதிய அளவிலும், அனுபவத்துடனும் வைத்தியர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் இருக்க மாட்டார்கள். நோயாளர்களை அவசியமின்றி அதிகளவில் கொழும்புக்கு அனுப்பும் நிலைமையும் ஏற்படும். மேலும் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து இடமாற்றம் பெறவுள்ள வைத்தியர்களுள் அரைவாசிக்கும் குறைவானவர்களே யாழில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு இடமாற்றப்படவுள்ளனர். ஏனையோர் வடக்குக்கு வெளியேயே செல்லவுள்ளனர். எனவே வைத்தியர்கள் இடமாற்றத்தால் ஈற்றில் ஒட்டு மொத்த பலனேதும் தமிழ் மக்களுக்கு ஏற்படப் போவது இல்லை என்பதை வட மாகாண சபையின் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு விளக்கினர்.

மாறாக, நாட்டின் ஏனைய பகுதிகளில் புதிதாக நியமனம் செய்பவர்களுள் 90 வீதத்துக்கு மேலானவர்கள் சிறிய வைத்திய சாலைகளுக்கே நியமிக்கப்படுவதைப் போல யாழிலும் செய்யுமாறு வேண்டினர். ஏனெனில் சிறிய வைத்தியசாலைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கான பயிற்சியே புதிய வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொண்டு செயலாளர், யாழ் போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்படவென காண்பிக்கப்பட்ட வெற்றிடங்களில் 12ஐ யாழிலுள்ள சிறிய வைத்தியசாலைகளுக்கு மாற்ற ஒப்புக்கொண்டார்.

செயலாளருடனான சந்திப்பின் போது யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர்கள் எவருமே வழமையான ஒழுங்குபடுத்தப்பட்ட இடமாற்றங்களை எதிர்க்கவில்லை என்றும், யாழ் போதனா வைத்தியசாலையின் பணிகளைப் பாதிக்காதவாறு இடமாற்றங்களை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் கட்டம் கட்டமாக அமுல்படுத்தவே கோருகின்றனர் என்பதும் விளக்கப்பட்டது.

மேலும் வடக்குக் கிழக்கின் நிலைமை இன்னமும் சீரடையவில்லை எனக்கூறி புதிதாக நியமனம் பெறுபவர்களைக் கவர்வதற்காக ஒரு வருடப் பணியுடனேயே தெற்கிலுள்ள நல்ல வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கும் விசேட இடமாற்ற நடை முறை வட – கிழக்கில் இன்னமும் அமுலில் உள்ளபோது வருடாந்த இடமாற்றத் திட்டத்தை மட்டும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளது போல் அமுல்படுத்துவது முரண்பாடானது என்பதும் விளக்கப்பட்டது.

செயலாளருடனான சந்திப்பின் பின் விடயங்கள் சுமூகமாக தீர்க்கப்பட்ட நம்பிக்கையுடனும் ஆசுவாசத்துடனும் பிரதிநிதிகளாகச் சென்ற வைத்திய நிபுணர்கள் திரும்பியபின் திடீரென மீண்டும் மூக்கை நுழைத்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் முன்னிலையிலேயே யாழ் போதனாவைத்தியசாலைப் பணிப்பாளரை ஒரு பெண்ணென்றும் பாராது கீழ்த்தரமான முறையில் தூற்றி அவமதித்தனர். அதுமட்டுமல்லாது, அமைச்சில் தமக்குள்ள முறைகேடான செல்வாக்கினைப் பயன்படுத்தி சில மணி நேரங்களுக்கு முன்னதாக செயலாளருடனான சந்திப்பின் மூலம் அடைந்த முன்னேற்றங்கள் அனைத்தையும் இல்லாதாக்கினர்.

மேலும், வரலாற்றில் முன்மாதிரி இல்லாத வகையில் அவமானகரமான முறையில் யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்டவர்களால் நம்பிக்கைக்குரியவர் அல்லர் எனப் பிரகடனப் படுத்தப்பட்டு பதவி இறக்கப்பட்ட வைத்தியர் நிமலன் அவர்களை யாழ் போதனா வைத்தியசாலையின் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கக் கிளையின் தொடர்பாளராக ஜனநாயக நாகரிகங்களை மீறி அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க தாய்ச்சங்கத்தினர் நியமித்தனர். வைத்தியர் நிமலனும் டான் தொலைக் காட்சியில் தோன்றி 300 வைத்தியர்களும் (அதாவது அனைவரும்) கையெழுத்துப் போட்டாலும் தானே தலைவர் எனவும் இனி எப்போதும் தானே தலைவர் எனவும் தன்னையே அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தாய்ச் சங்கம் நியமித்துள்ளது எனவும் மார்தட்டிய கேவலத்தை யாழ் மக்கள் பார்த்தனர்.

யாழ் போதனா வைத்தியசாலையினதும், அதன் வைத்தியர்களினதும் ஒட்டு மொத்தமாக மக்களதும் நலன்களுக்காக போராட முன் வந்த இடைக்கால நிர்வாக சபை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தாய்ச்சங்கத்தின் ஜனநாயக மீறலால் வலுவிழந்து போனது. யாழ் போதனா வைத்தியசாலையின் சேவைகளைப் பாதுகாக்க முயன்று தனிப்பட்ட வகையில் மனப்பாதிப்புக்குள்ளான பணிப்பாளர், இடைக்கால நிர்வாக சபையின் அனுசரனையும் இல்லாமல் போன போது அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அழுத்தங்களுக்கு உள்ளக வேண்டி ஏற்பட்டது.

இடமாற்றம் பெற்ற 87 பேரில் ஏலவே 09 பேர் சுய விருப்பின் அடிப்படையில் வெளியேறிச் சென்ற நிலையில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அழுத்தங்களால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மிகவும் தேவையான, தொடர்ந்து பணியாற்ற முன்வந்திருந்த 15 வைத்தியர்கள் 30.09.2013 அன்று விடுவிக்கப்பட்டனர். இதனால் ஏற்கனவே வெளிநோயாளர் பிரிவு, மயக்கமருந்துப்பிரிவு போன்றன பெருமளவு சீர்குலைந்து போயுள்ளன. இன்னமும் மீதி 63 பேரையும் விடுவிக்குமாறு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர்ந்தும் அச்சுறுத்திய வண்ணமுள்ளது.

அது மட்டுமல்லாது, வைத்தியர் நிமலன் தன்னாலும் வைத்தியர் சாயிநிரஞ்சனாலும் இடமாற்றம் பெறுகின்ற வைத்தியர்கள் விரும்பினால் அவர்கள் விரும்புகின்ற வைத்தியசாலைகளுக்கு இடமாற்றங்களை மாற்றித்தர முடியும் எனக் கூறியும் வருகின்றனர். அந்த இடமாற்றச் சலுகைகளைப் பெற வேண்டுமானால் தன்னைப் பதவி நீக்குமாறு கோரி அனுப்பப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானக் கடிதத்தில் கையெழுத்திட்டதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் அந்த மன்னிப்பை எழுத்தில் தர வேண்டும் எனவும் நிபந்தனை விதித்துவருகின்றார்.

எதிர்காலத்தை சற்றுட் சிந்தித்துப் பார்க்காது செய்யப்பட்டுள்ள வைத்தியர்களின் இடமாற்றங்களினால், இன்று வரை வடமாகாணத்தின் ஒரே ஒரு மூன்றாம் நிலை வைத்தியசாலையான யாழ் போதனா வைத்தியசாலையின் சேவைகள் வீழ்ந்துபடாமல் காப்பாற்றி, வடமாகாணம் முழுமைக்கும் சேவையாற்றி வந்த பெரும் அனுபவம் நிறைந்த வைத்தியர்கள் பலர் இனிமேல் சிறிய வைத்தியசாலைகளில் தமது திறமைக்குரிய சேவைகளை வழங்கமுடியாமல் அவர்களது திறமைகள் வீணடிக்கப்பட்டு ஒரு சிறியளவிலான பகுதி மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்திய அளவில் சேவையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதே வேளை மக்கள் பெருமளவில் சிகிச்சைக்காக நாடி வரும் யாழ் போதனா வைத்தியசாலை சேவைகளை முன்னர் போல் தரமாகவோ போதியளவிலோ வழங்க முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. சமூகப்பொறுப்புமிக்க மக்கள் பிரதிநிதிகள் இவ்விடயத்தில் தலையிட்டு உரியன செய்ய வேண்டும் என்தே முரசொலியின் எதிர்பார்ப்பாகும். தயவுசெய்து இக் கட்டுரை தொடர்பில் உங்கள் கருத்து தெரிவிக்கவிரும்பின் நமது மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்புகொள்ளுங்கள்

*ஆசிரியர்தின சிறப்புப் பதிவுகள் காரணமாக படிப்பது எப்படி தொடர் இம்முறை இடம்பெறவில்லை அடுத்த வாரம் வெளிவரும் ஆ-ர்*

## இராஜதந்திரப் போர்... (03ம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்புக்கூறுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்காது போனால், அனைத்துலக விசாரணைக்கு வலியுறுத்தப்படும் என்று எச்சரிக்கின்றனர். மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக, ஒத்துழைப்பு வழங்கும் ஐ.நா மனிதஉரிமை ஆணையம் மற்றும் நாடுகளை அமெரிக்கா பாராட்டுகிறது. மூன்று மாகாணங் களுக்கான தேர்தல் வெற்றிகரமாக நடந்துள்ளதற்கு சிறிலங்கா மக்களுக்கு அமெரிக்காவின் வாழ்த்துக்கள் பரிமாறப்படுகின்றது. மாகாணசபைகளுடன் ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுமாறும், அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் கடப்பாட்டை நிறைவேற்றுமாறும் சிறிலங்கா அரசாங்கத்தை அமெரிக்கா கேட்டுக் கொள்கிறது. கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் தொடர்பான கட்டுப்பாடுகள், மனிதஉரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், நீதித்துறைத் தலையீடுகள், குறித்து, மனிதஉரிமை ஆணையரின் கவலைகளை சர்வதேசமும் பிரதிபலிக்கிறது.

சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பாகுபாடுகள் குறித்தும், மனிதஉரிமை மற்றும் சட்டமீறல்களை புரிவோர் தண்டிக்கப்படுவதில் இருந்து தப்பித்தல், அமைதியாக ஒன்று கூடுவதற்கான கட்டுப்பாடுகள், பொறுப்புக்கூறுவதில் முன்னேற்றமின்மை, அனைத்துலக விசாரணையை வலியுறுத்தும் என்ற எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. பொறுப்புக்கூறவும், மனிதஉரிமைகள் குறித்த கடப்பாட்டை நிறைவேற்றவும், சிறிலங்கா முன்வர வேண்டும் என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் சத்தமாகவும் தெளிவாகவும் அழைப்பு விடுக்கின்றார்.

இவையெல்லாம் தமிழர்களின் விடிவுக்கான சமிக்கைகளாக, நம்பிக்கை ஒளிக்கீற்றுக்களாக கொண்டாடப்படுகின்றன. ஆனால் அன்று முதல் இன்றுவரை உலகின் அக்கறை என்பது மனிதஉரிமைகள், போர்க்குற்றங்கள், தேர்தல்கள் பற்றியனவே அன்றி தமிழர்களுக்கான தீர்வைப்பற்றிப் பேசுவன அல்ல. தமிழர்களுக்காக திறந்துள்ள சர்வதேசத்தின் இராஜதந்திர நுழைவாயில்கள் மனிதாபிமான நெருக்கடிகளை முறையிடுவதற்கும் 13ம் திருத்தத்திற்குள் நுழைவதற்குமான அளவிற்கே விசாலமானவை. அதைத்தாண்டி அரசியல் அபிலாஷைகள், அரசியலுரிமைக் கோரிக்கைகள் எழும்போது இந்தக்கதவுகள் இறுகமூடிக்கொண்டதே கடந்த கால வரலாறு.

எமது விடுதலைப்போராட்டத்தை அழிக்க வேண்டும் தனிநாடு என்ற பேச்சே இருக்கக் கூடாது என்பதே மேற்குலகினதும் இந்தியாவினதும் நிலைப்பாடு. இதற்கு ஈடாக 13 ஆவது திருத்தச்சட்டத்தை தமிழ் மக்களின் அரசியல் தீர்வாகத் திணித்துவிட வேண்டும் என்ற நிலைப்பாடே அவர்களிடம் இருந்தது. உண்மையான அதிகாரப் பகிர்வு நடக்க வேண்டுமென்றால், 13வது அரசியல் சாசனத் திருத்தத்தில் இருந்து தொடங்க முடியாது என்பது வெட்ட வெளிச்சம். இதைப் புரிந்திருந்த காரணத்தினால்தான், இத்திருத்தம் வந்த உடனேயே, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமைப் பொறுப்பில் இருந்த அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் மற்றும் சம்பந்தன் ஆகிய மூவரும், 28 அக்டோபர் 1987 தேதியிட்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அவசரக் கடிதம் ஒன்றை எழுதி இதன் குறைபாடுகளை நுணுக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக் காட்டி, அதை நிறைவேற்றுவதை நிறுத்தி வைக்குமாறு ஜெயவர்த்தனா அரசை கேட்டுக் கொள்ளுமாறு ராஜீவ் காந்தியை வலியுறுத்தியிருந்தனர். அப்போதிருந்த 13 ஆவது திருத்தச்சட்டம் கழுதை என்றால் இன்று அது கட்டெறும்பு. ஆனால், இன்றோ, இத்திருத்தத்தை விட்டால் வேறு வழி ஏதும் இல்லை என்று சம்பந்தன் அவர்களே வலியுறுத்தும் வேடிக்கையைக் காண வேண்டியிருக்கிறது.

இந்த வலியுத்தல் மேற்குலகினதும் இந்தியாவினதும் விருப்பமே எமக்கான உலக அங்கீகாரத்தைத் தக்கவைக்கும் என்பதன் அடிப்படையிலான இராஜதந்திர நிலைப்பாடாகவும் இருக்கலாம். ஆனால் கடந்த காலத்தில் தமிழர்கள் நலிவுற்று அனுதாபத்திற்குரியவர்களாக இருந்தவேளைகளில் தாம் விரும்பிய தீர்வைத் திணிக்கும்போது உலக இராஜதந்திரக்களம் தமிழர்களுக்கு சார்பானதாகவும், தமிழர்கள் மீது அனுதாபம் மிக்கதாகவும் இருந்தது என்பதும் தமிழர்கள் பேரம் பேசும் வல்லமை கொண்டவர்களாக பலம் பெற்ற வேளைகளில் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் சார்ந்து, தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்தது என்பது கடந்த பத்தாண்டுகளிலும் நிரூபிக்கப்பட்டது. இது புரிந்து கொள்ளப்படுதல் இராஜதந்திர யுத்தகளத்தில் நிற்கும் தளபதிகளுக்குப் பழைய களங்களுக்கு திரும்பாதிருக்கவும், புதிய பாதைகளைக் காட்டவும் உதவும் . இராஜதந்திரப் போர் தமிழர்களுக்குப் புதிதல்லவே. ●

## facebook (05ம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைப்பாடு. கட்சிகளை முன்னிலைப்படுத்தும் அரசியலைக் கடந்து, தமிழர் தரப்பு அரசியல் தொடர்ந்தும், இருப்புக்கான தேசிய அபிலாஷைகள் மற்றும் கொள்கை வழிப்பட்டதாக அதனூடான விழிப்புணர்வையும் மக்கள் எழுச்சியையும் நோக்கியதாகவே இருக்க வேண்டும், அதற்காக செயற்பட வேண்டும் என்பதே எமது நோக்கம். நிரந்தர தீர்வு ஒன்றுக்கு வழியேதும் காணாமல் எம்மீது திணிக்கப்படும் தேர்தல்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பில் முன் யோசனையுடனும் தூர நோக்குடனும் செயற்படுவது இற்றைக் காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலின் முன்னகர்வுக்கு மிகவும் அத்தியாவசியமானது. எமது உரிமைக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களை தறுக்கணிக்கக் கூடிய மாகாண சபை முறைமைக்கான தேர்தல் தொடர்பில் நாம் அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். குறிப்பாக மாகாண சபை முறைமைக்கும் அரசியல் தீர்வுச் செயன்முறைக்கும் இடையிலான உறவு நிலை தொடர்பில் கூட்டமைப்பு தெளிவான நிலைப்பாட்டை தமது தேர்தல் அறிக்கை மூலம் முன்வைக்காமை எமக்குக் கவலையளிக்கின்றது. குறிப்பாக சமஷ்டியை நோக்கிய நகர்வில் மாகாண சபையில் பங்குபற்றுவது முதற்படியாக இருக்கும் என்ற த.தே.கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையின் பகுதிகளை மக்களையும் சர்வதேசத்தையும் தவறாக வழிநடத்தும் ஒரு ஆபத்தான பிழையான செய்தியாக நாம் கருதுகின்றோம். 13ஆம் திருத்தத்திற்குள் எமது தேசிய அரசியலை முடக்கும் தமிழ்த் தேசிய நலன்களுக்கு எதிரானவர்களின் முயற்சிகளுக்கு த.தே. கூட்டமைப்பின் இத்தகைய நிலைப்பாடு வலுச் சேர்த்து விடுமோ என அஞ்சுகின்றோம்."

2. தாங்கள் 2010 பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு வேட்பாளர்களைத் தேடுவதில் ஈடுபட்டிருந்ததை நான் அறிவேன். எந்த அடிப்படையில் அந்தப் பணியை நீங்கள் ஆற்றினீர்கள் என்பதனைத் தயவன்புடன் நான் கேட்கலாமா? அன்று நீங்கள் கொண்டிருந்த சிந்தனையிலிருந்து ஏன் மாறுபட வேண்டி வந்தது என்பதனையும் அறிந்து கொள்ளலாமா? அதற்கு நியாயமான காரணங்கள் இருக்கலாம் என்பதை உணர்கிறேன். அதனால் தான் கேட்கிறேன். நன்றி.

Like | Comment | Share 👍 |

**(குருபரனின் கேள்விக்கான பதிலுடன் அடுத்தவாரமும் மீதி தொடரும்...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி வம்பானந்தா

> "புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து"
> ■ கமல்ஹாசன்

திருவிழா முடிஞ்ச கையோடை எங் கையிருந்தோ தெரியயில்லை இனந்தெரியாத நபர்களும் வரத் தொடங்கியிட்டினம். தோல்வி கொடுத்த அதிர்ச்சியும், விரக்தியும் பழையபடி கிறிஸ்பூதங்களையும் கூட்டிக்கொண்டு வருமோ தெரியயில்லையெண்டு சனங்கதைக்குது. கிளிநொச்சியிலையும் தீவகத்திலையும், நல்லூரிலையும், தென்மராட்சிப் பக்கத்திலையும் இனந்தெரியாதவை தாக்குதல் நடத்தினவை எண்டு கதைக்கினம்.


ஏற்கனவே செய்த வினைதான் திரு விழாவிலை இந்தப் பரிசு கிடைக்கக் காரணம் எண்டதை மறந்து திரும்பவும் இனந்தெரியாதவையாயும், முகமூடிக்காரராயும் மாறினால் அடுத்தடுத்த திருவிழாக்களிலை சனம் உங்களை முழுசாய் அடையாளம் தெரியாதவையாய் மாத்திப்போடும் பாருங்கோ. நான் கோபத்திலையோ, காழ்ப்புணர்விலையோ பேசயில்லை. நல்லதுக்குத்தான் சொல்லுறன், கேட்டால் கேளுங்கோ.

உண்ணாவிரதம் எல்லாம் பழைய ஸ்ரையில் பாருங்கோ. இப்ப தீக்குளிப்புத்தான் பிரபலம். நீங்களும் வெள்ளிக்கிழமையிலை முரசொலி வராட்டில் தீக்குளிப்பன் எண்டு அறிக்கை விடுங்கோவன். திருவிழா அறிவிச்ச கையோடை எங்கடை பொடியன் ஒண்டு "அண்ணனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தாதவிடின் நான் தீக்குளிக்கவும் தயங்க மாட்டேன்" எண்டு தீக்குளிப்பு அறிக்கை விட்டவரெல்லே.

திருவிழாக்காலத்திலை ரீமிக்ஸ் படங்காட்டின இன்னொரு கொம்மினிக்கேசன் காரத்தம்பி இப்ப திருவிழா முடிஞ்சு அண்ணனை ஆனந்தமான கதிரைச்சவாரிக்கு விடாட்டில் தீக்குளிப்பன் எண்டு அறிக்கை விட்டிருக்கிறார். ஆனந்தமானவருக்கு சங்கீதக்க திரை கிடையாது எண்டது உறுதியாயிட்டுது. அப்பிடியானால் அண்ணை எப்ப தீக்குளிக்க போறியள். எந்த இடத்தில தீக்குளிக்க போறியள், தீக்குளிக்கிற இடத்தையும் நேரத்தையும் நேரகாலத்தோட சொன்னால் நாங்கள் வந்து படம் எடுக்கலாம்.

ஆரம்பத்திலை உதிலை ஒண்டுமில்லை வெறுங்கதிரை எண்டு சொன்னியள். பிறகு வெறுங்கதிரையெண்டாலும் பரவாயில்லை 30 கதிரை வாங்கித்தாருங்கோ இதலை நிண்டு கொண்டு இராசதந்திரப்போர் தொடங்கப்போறம் எண்டியள். சனமும் நிறைய விலை குடுத்து வாங்கித்தந்ததுகள்.

கிடைச்ச கதிரைக்கு உங்களுக்கை நடக்கிற போட்டியைப் பார்த்து ஒண்டுமில்லாத வெறுங்கதிரைக்கு ஏன் இப்பிடிப் புடுங்குப்படுகிறியள் எண்டு விளங்காமல் சனம் முளிசுது பாருங்கோ. இரண்டு கதிரை வைச்சு சங்கீதக்க திரை நடத்துறதும், மந்திரி வேஷத்தை எனக்குப் போட்டுவிடுங்கோ எண்டு அடம்பிடிக்கிற



தும், ஆராருக்கு வேஷம் கட்டுறது எண்டு கொழும்பிலை போய் நிண்டு யோசிச்சு கடைசி முடிவெடுக்கிறதும் எண்டு உங்கடை கூத்தைப் பாத்திட்டு கொழும்பிலை முருங்கை மரம் ஏதும் இருக்குதோ எண்டு சனம் யோசிக்குது. முருங்கையடிச்சாத்திரி மாதிரி உங்களுக்கும் கொழும்புக்குப் போனால் தான் சாத்திரம் வெளிக்குது.

அதுசரி சங்கீதக்கதிரைக்கான போர், மந்திரி வேஷத்துக்கான போர், நாட்டாமையோடை யுத்தம், இவ்வளவு நாளும் நாட்டாமைக்கு வால்பிடிச்ச அதிகாரிமாரோடை போர், காணிநிலம் வேண்டும் எண்டு வெகுஜனப் போர் எல்லாம் முடிச்சிட்டு இராச தந்திரப்போரைத் தொடங்க அடுத்த திருவிழா வந்திடும் போலை.

கொம்மின் தயாளசிறி எண்ட பெரிய அப்புக் காத்து காணி நிலம் கேக்கிறது நியாய மில்லை. முந்திப் பக்கத்து வீட்டுக்காரரோடை அக்கிறிமென்ட் எழுதேக்கை கனவிசயத்தை யோசிக்காமல் காணியையும் காவலையும் எழுதிப் போட்டம். இப்ப காணி நடுவிலைதான் இருக்கோணும் எண்டு பெரிய மன்றம் சொல்லிட்டுது. காவல் அதிகார கோரிக்கைகளுக்கும் சட்ட ரீதியாய் விரைவில் பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எண்டு சொன்னவரல்லோ. இதுக்கு என்ன அர்த்தம் எண்டது எல்லாருக்கும் தெரியும். காவலையும் பிடுங்கப்போகினம்.

முந்தி பெரிய மன்றத்திலை ராணி அம்மா இருக்கேக்கை காணி நடுவிலை இருக்கேலாது. பங்கிட வேணும் எண்டமாதிரி தீர்ப்புக்குடுத்தவவாம். அம்மாவைக் கழட்டி விட்டிட்டு ஐயாவைப் போட்டாப்பிறகு நாட்டாமை தீர்ப்பை மாத்து எண்டு மேன்முறையிட்டவையல்லோ. ஐயாவும் பெரிய இடத்து மனங்கோணாமல் சட்டப்படி நல்லகாரியங்கள் செய்யிறார். முந்தி இப்பிடிச்செய்த கனபேர் கடைசியிலை றோட்டுக்கு வந்தவை எண்டது ஐயாவுக்கும் தெரியும். இருக்கிற கொஞ்சத்தையும் எப்பிடி முறையாய் பிடுங்கி எடுக்கலாம் எண்டு அவை அரசமரத்துக்கு கீழை இருந்து யோசிக்கினம். நாங்கள் பேசிப்பறைஞ்சு உரியதெல்லாத்தையும் வாங்கப்போறம் எண்டு சொல்லுறம். கேட்க எனக்கு தலை சுத்துது. உங்களுக்கு எப்பிடி?

மீன்பாடும் தேனாட்டிலை பொம்பிளையளை முன்னேற்றப் போறம் எண்டு சுய தொழிலுக்கு கடன் குடுத்தவை கடனை திருப்பிக்குடுக்க தாமதிக்கிற பொம்பிளையளிட்டை கோபப்படாமல் அன்பாயிருக்கினமாம். காசு என்ன பெரிசே, மனிசனுக்கு சந்தோசம்தான் முக்கியம் வாருங்கோ செல்லமாய் இருப்பம், கிள்ளி நுள்ளிவிளையாடி என்ஜோய் பண்ணுவம் எண்டு கூப்பிடுகினமாம். என்ன பெரிய மனம் பாருங்கோ. அதைவிட எங்கடை நிர்வாகம் எப்பிடியெல்லாம் சனத்தை பாதுகாக்குது எண்டு பார்க்க புல்லரிக்குது.

இப்ப ஸ்கைப்பிலை கனபேர் முகம் காட்டிப் பேசுகினம், வேறை சிலபேர் காட்டக்கூடாத விசயங்களையும் காட்டி சில்மிசம் பண்ணுகினமாம், எனக்கெண்டால் ஒருநாளும் பாக்கக் கிடைக்கயில்லை. இது எல்லாத்தையும் விட ஒரு பிள்ளை ஸ்கைப்பிலை செத்துக் காட்டியிருக்குது. எங்கடை சனம் எவ்வளவு மனநலத்தோடை இருக்குதுகள் எண்டதை விளங்கிக் கொண்டு இனியெண்டாலும் நாங்கள் செயல்படயில்லை எண்டால் இப்பிடிச்செய்தியனை இன்னும் எதிர்பாக்கவேண்டியிருக்கும், உளசமூகப்பணி செய்யிறவை இன்னும் அதியம் உழைக்க வேணும் பாருங்கோ. சிரமம்தான். என்னசெய்யிறது. எங்கடை சனந்தானே.

ஒருத்தரையும் குறை சொல்லுறது என்ரை நோக்கமில்லைப்பாருங்கோ. முகம் நோக்கிச் சிரிப்பது நட்பல்ல, குறைநீக்க உரைப்பதே நட்பு எண்டு நினைச்சு மட்டும்தான் எழுதிறன். நீங்கள் எனக்கேதும் எழுதிறதெண்டால் vampanantha@gmail.com க்கு எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.

# பனை மரம் பற்றிய ஓர் பார்வை

திருமதி சுபாக்ஷினி பிரணவன்

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

இவ்வாறு சிறப்புப் பொருந்திய பனையானது அதன் வேர் முதல் வெண்குருத்து வரையாக பல் பயனுதவி ஈழத் தமிழருக்குத் அடிப்படைத் தேவையாகிய உணவு உறையுள், மருந்து முதலியவற்றிற்கும் பிறவாழ்க்கைத் தேவைகளுக்கும் ஆதாரமாக அமைந்துள்ளமையை நாட்டார் பாடல்கள் வாயிலாகவும் அறிய முடிகிறது.

பனைமரமே பனைமரமே
ஏன் வளர்ந்தாய் பனைமரமே
நான் வளர்ந்த சேதியினை
நாடறியச் சொல்லிடுவேன்
படிக்க நல்ல தம்பியர்க்கு
பட்டோலை நானாவேன்
புடைக்க நல்ல தங்கையர்க்கு
புடை சுளகு நானாவேன்
படுத்திருக்கப் பாயாவேன்
இட்டித் திருக்க தடுகாவேன்
தூரத்து வள்ளிமைக்குத்
தூதோலை நானாவேன்.

ஆக பனையானது உணவு மற்றும் உணவிலாப் பொருட்களைத் தருகிறது. இளம் பனைகள் வடலி என்று அழைக்கப்படுகின்றன. பனை வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு பதினைந்து ஆண்டுகள் வரை எடுக்கும். அதன் வயது மனிதனின் சராசரி வயதிலும் கூடியது என கூறப்படுகிறது. பனைகள் குறிப்பிடத் தக்க வளைவுகள் ஏதுமின்றி சுமார் 30 மீற்றர் வரை வளரக் கூடியவை கிளைகள் அல்லாத இத் தாவரத்தின் உச்சியில் கிட்டத்தட்ட 30-40 வரையான விசிறி வடிவ ஓலைகள் வட்டமாக அமைந்திருக்கும். பனைமரத்திலிருந்து ஆண்டொன்றுக்குச் கிடைக்கும் பொருட்களைக் பின்வருமாறு ஆய்வு தருகிறது.

பதனீர்-180 லீற்றர்
பனை வெல்லம்-25 கிலோ
பனஞ்சீனி- 16 கிலோ
தும்பு- 11.4 கிலோ
ஈர்க்கு- 2.25 கிலோ
விறகு 10 கிலோ
ஓலை- 10 கிலோ
நார்- 20 கிலோ

பனையிலிருந்து சுமார் எண்ணூறு வகையான பயன்களைப் பெறலாம் உதாரணமாக

நுங்கு- வெப்பத்தால் உண்டாகும் எலும்பு பாதிப்பு மேலும் உஸ்ணத்தால் ஏற்படும் வேர்க்கரு தழும்பு அம்மைக் கொப்பளங்கள் குளிர்ந்த பனை நொங்கு நீரிலே கரைந்து விடுகின்றன. சிறு நீரக நோய்களை நீக்கவும் உடம்பின் உள்ளிருக்கும் புண்களைப் போக்கவும் பனை நுங்கு நல்ல மருந்து. இளம் நுங்கு கற்கண்டு போல இனிக்கும் இளம் நுங்கை சீவி பசுவின் உணவாக்கலாம்.

பனம்பழம்- முற்றிய நுங்கு பனங்காய் பனங்காய் முற்றிப் பனம் பழம் ஆகிறது. பனம் பழத்தின் களியை எடுத்து பனங்காய்ப பணியாரம் செய்தால் சுவை மிகுந்த உணவு தீயில் சுட்ட பனம் பழம் கூடச் சுவையாக உண்ணப்படுகிறது. பனம்பழத்திலிருந்து ஜாம் தயாரிக்கப்படுகிறது. பனங்களியைக் கறந்து உயர்ந்த அறணில் பனம் பாய் விரித்து நாளாந்தம் கறக்கும் களியை பரவி யூற்றி உலரவிட்டு தடித்த பனாட்டு பெறப்படுகிறது. காய்ந்ததும் வெட்டி மடித்து வைத்து சேமிப்பர் இது எம் முன்னோர்களின் மாரிகால உணவாகும்.

கள்- பனையின் பாளையிலிருந்து சேகரிக்கப்படும் போதை தரும் பானமாகும் உடலுக்கு உற்சாகமளிக்கும் இயற்கைப் பானமாக விளங்கியது. இப் பனங்கள்ளை பனை ஓலை பிளாவில ஊற்றிப் பருகும் பழக்கத்தைப் முன் னோர் கொண்டிருந்தனர். அத்துடன் பனஞ்சா ராயமும் வினாகிரியும் பெறப்படுகிறது.

பதநீர்- உணவுப் பொருட்களில் பதநீர் முதன்மையானது. புளித்துப் போகாமல் இருப்பதற்காக உட்புறம் சுண்ணாம்பு தடவப்பட்ட கலயத்தில் சேகரிக்கப்படும். இதனைக் காய்ச்சி கருப்பட்டி செய்வதோடு வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு எனப் பல்வேறு உணவுப் பொருட்கள் செய்யப்படுகின்றன. பனஞ்சாறு உடலுக்கு நலம் தரும் நீரகம் மட்டுமன்றி ஈரல் நோய்க்கு ஏற்ற மருந்தாகும். மேலும் பதநீரில் பனங்கற்கண்டு பெறப்படுகிறது. குழந்தைகளுக்கு நல்ல மருந்து.

பனங்கிழங்கு- பனம் பழத்தின் உள்ளே உள்ள விதை மழை பெய்ததும் முளைக்கும்ஆதலால் பனம் பார்த்தியை மூன்று அடி உயரத்திற்கு மேடுபடுத்தி அந்த மேட்டிலே மாரி தொடங்க பன விதைகளை அடுக்கி விதைகளுக்கு மேல் மண் போட்டு ஆறு மாதமளவில் பனங்கிழங்கு முற்றியதும் பனம் பார்த்தியைப் பிரித்து கிழங்கை அகழ்ந்தெடுப்பர். பனங்கிழங்கின் விதையை பிளந்து பிரித்து தும்பு வார்ந்து உண்ணலாம். மேலும் அவித்த பனங்கிழங்கை பிரித்து வெயிலில் நன்றாக உலர வைத்தால் புழுக் கொடியலாகும். பச்சைக் கிழங்கைப் பிரித்து வெயிலில் இட்டால் ஒடியலாகும். நன்றாக உலர்ந்த ஒடியலை மாவாகக்கி பிட்டாகவும் கூழாகவும் அருந்த முடியும். ஆடிப்பிறப்பிற்கு தமிழ் இல்லங்கள் தோறும் பனங்கட்டிக் கூழ் காய்ச்சுவது மரபு. நம் முன்னோர்கள் உடல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தமைக்கு இந்த ஒடியல் பிட்டு, கூழ் என்பனவும் காரணங்களே.

வேர் முதல் நுனிவரை பனையின் இவ்வாறாக பயனைக் கூறிக் கொண்டே போகலாம்.

சோர்வை நீக்கவும் உடல்வலி மற்றும் அலுப்பைப் போக்கவும் பனம் பானங்கள் பயன்பட்டதைப் போல பனம் மட்டைச்சாறு பிழிந்து கண்களில் ஏற்படும் பாதிப்புக்களை நம் தமிழர் குணப்படுத்தியிருக்கிறார்கள்.

19ம் நூற்றாண்டின் முற்பகுதிகளிலும் அதற்கு முற்பட்ட காலங்களிலும் யாழ்ப்பாணத்தவரின் வாழ்வியலில் பனைகள் வகித்த வகிபாகம் சொல்லி முடியாதவை. குடியிருப்புக்கள், பனந்தோப்புக்களை அண்டியிருந்தமை மட்டுமன்றி பனையோலையால் அமைக்கப்பட்ட கூரை வேலிகளாக உதவிய மரக்குற்றித் துண்

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை
# கப்பல் ஓட்டிய தமிழர்கள் 2

**அத்தியாயம் 02**

வல்வெட்டித் துறை துறைமுகத்தில் இரண்டாம் மகா யுத்தத்திற்கு முன்பாக சுமார் அறுபது பெரிய பாய்மரக் கப்பல்கள் இயங்கிக் கொண்டிருந்தன.

மூவாயிரத்திலிருந்து பதினாறாயிரம் வரையான மூடைகள் ஏற்றக்கூடிய பெரும், பெரும் பாய்மரக் கப்பல்கள் திரைகடலோடி வாணிபம் செய்து கொண்டிருந்தன.

அந்தக் கப்பல்களில், தண்டையல்களாக இருந்தவர்கள், முழுக்க முழுக்க வல்வெட்டித் துறை வாசிகள்தான்!

கப்பல் செலுத்துவதில் நன்கு அனுபவம் பெற்று, மாலுமிசாஸ்திரத்தைக் கற்றுத் தெரிந்தவர்களையே தண்டையல்கள் என்று அழைத்தார்கள்!

கப்பலொன்றின் காப்டனுக்கு நிகரானவர்கள்.

தண்டையல் என்றால் எப்படி இருப்பார் என்பதை விளக்க ஒரு உதாரணம்-

வல்வெட்டித்துறை தண்டையர்களில் ஒரு காலத்தில்கொடிகட்டிப் பறந்தவர்-

நாராயணப்பிள்ளைத் தண்டையல்!

பர்மாக்காரனுக்கு சொந்தமான பாய்மரக் கப்பலில், அவர் அப்போது தண்டையல்!

இந்தப் பெரிய கப்பலில், இருபத்துநான்கு பர்மாக்காரர்கள், இவருக்கு கீழே கடலோடிகளாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்!

தமிழர் ஒருவர் மட்டும் உதவியாளராக இருந்தார்; கணக்குப் பார்ப்பதற்கு ஒரு சீன இளைஞர்!

பினாங்குக் கப்பலை செலுத்திக் கொண்டிருந்தார் நாராயணப் பிள்ளை!

பதினாறாவது மைல் தூரத்தில், ஒரு மணல் திட்டு-

கப்பல் தரைதட்டி விட்டது! நங்கூரமிடப்பட்டது.

கப்பல் புறப்படுவது முதல், கடலோடிகளின் கடமைகள் வரையான சகல விஷயங்களும் தண்டையலின் உத்தரவின் பேரில் தான் நடக்கவேண்டும.

திடீரென்று,

நங்கூரமிடப்பட்ட தமது கப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாக நங்கூரம் எடுக்கப்பட்ட விபரத்தைத் தெரிந்து கொண்டார்.

அவருக்கு கீழ் பணியாற்றும் நேரடி ஊழியனான பர்மாக்காரன் ஒருவன் நங்கூரத்தை அகற்றியதைத் தெரிந்து கொண்டார்.

ஆத்திரம் பொத்தென்று வந்தது தண்டையலுக்கு!

அடுத்த வினாடி -

நங்கூரத்தை மீண்டும் போடும் படி உத்தரவு பிறப்பித்தார் தண்டையல்.

குறித்த பர்மாக்காரனை உடனடியாகக் கரையில் கொண்டு போய்விட்டு வரும்படி கட்டளையிட்டார்!

கப்பலுள்ளே இருந்த சிறிய படகொன்று வெளியே எடுக்கப்பட்டு கடலில் மிதந்தது!

இருபத்து முன்று பர்மாக்காரர்களும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

கப்பல் கட்டுவதிலும், கப்பலோட்டுவதிலும் வல்வெட்டித்துறை மக்கள் சிறப்பு மிக்கவர்கள் என்பதைப் பல வெளிநாடுகளே ஒப்புக் கொண்டுள்ளன.

இந்தியா,
பர்மா,
பாகிஸ்தான்,
மலேயா,
இந்தோனேசியா,
அரேபியா,

போன்ற நாடுகள் வல்வெட்டித்துறையின் கீர்த்தியை அங்கரித்துள்ளன.

ஆதார பூர்வமாகவே அதனைக் குறிப்பிடுகிறேன்.

உலகத்தின் எந்த ஒரு நாட்டிலும் கட்டப்பட்ட கப்பலையும், லோயிட்ஸ் உலன ஸ்தாபனத்தில் அப்போது பதிவு செய்ய வேண்டும்.

வல்வெட்டித் துறையில் கட்டப்பட்ட கப்பல்கள் எல்லாமே அந்தந்தக் காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை ஒரு விசேஷ துறைமுகமாகவும் கப்பல் கட்டும் தளமாகவும், கடலோடிகள் வசிப்பிடமாகவும், வே ஒவ் பெங்கோல் பைலட் என்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நூலின் பிரதிகள் கொழும்பு சிப்பிங் அலுவலகத்திலும், துறைமுக அதிகார அலுவலகத்திலும், சுங்க இலாகத் தலைமைப்பீடத்திலும் இன்னும் இருக்கின்றன.

அத்திலாந்திக் கிங்

பன்னீராயிரம் தொன் எடையுள்ள கப்பல் சாமான்களை ஏற்றிக் கொண்டு வந்த போது,

திடீரென்று,

மீட்க முயன்ற அக்கப்பல் ஊழியர்களும், உரிமையாளரும் மனம் தளர்ந்தனர்!

அந்த நேரத்தில் -

கைகொடுத்து உதவினார், வல்வெட்டித் துறை கப்பல் உரிமையாளர் ஒருவர்!

கப்பல் கட்டும் கலையிலும், மாலுமி சாஸ்திரத்திலும், வான சாஸ்திரத்திலும், அறிவும் ஆற்றலும் பெற்ற வெங்கடாசலம் என்ற அவர் மூழ்கிய நிலையிலேயே கப்பலை விலை கொடுத்து வாங்கினார்!

எவர் தான் இப்படித் துணிந்து மூழ்கிய கப்பலை விலை கொடுத்து வாங்குவார்கள்?

ஆங்கிலேயனால் மீட்க்க முடியாத முழ்கிய அந்தப் பொன்னாம் பெரிய ராட்சதக் கப்பலை வல்வெட்டித்துறையான் மீட்டு, மிதக்கவிட்டு,அலைகடலின் நடுவே அதனை மீண்டும் ஓடவிட்டான்.

-நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம்.

கப்பலோட்டிய வல்வெட்டத்துறைத் தமிழன் வீரத்துக்கு இப்படி எத்தனையோ சாம்பிள்கள்!

வல்வெட்டித்துறை!

இந்தப் பெயர் எப்படி வந்தது?

றோமுக்கும்,
கிரேக்கத்துக்கும்,
எகிப்துக்கும்,

இந்த துறைமுகங்களிலிருந்து வெல்வெட் என்ற பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட காலத்துக்குப் பிறகு இப்பெயர் சூட்டப்பட்டதாக சொல்லப்படுகிறது

வேறு நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த வெல்வெட் வல்வெட்டித்துறைக் களஞ்சியங்களில் நிறைத்து வைக்கப்பட்டு றோம், எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனவாம். தரமான வெல்வெட்டை எடுத்துக் கொண்டு வருவதில் கைவரப் பெற்றவர்களாக விளங்கினார்கள்.

வெல்வெட்டுக்குப் பேர் போன இடமாக அவ்விடம் திகழ்ந்ததனால், வல்வெட்டித் துறை என அழைக்கப்பட்டு நாளடைவில் வல்வெட்டித்துறை பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது!

ஏதோ ஓர் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

*(பயணம் தொடரும்...)*

# சிரஞ்சீவியாக... 6 நவமகாஜனசிற்பி தெ.து.ஐயரத்தினம்

அவரது புன்முறுவல் அயிரம் போர்க் கப்பலை மூழ்கடிக்கும் திறன் வாய்ந்தது என்ற நிதர்சனமான வார்த்தைகளினால் அனைவராலும் புகழப்பட்ட மகாஜன சிற்பி அமரர் தெ.து. ஜெயரத்தினம் அவர்களுக்கு ஒக்டோபர்15ம் திகதி நூற்றாண்டு பிறந்த தினம் அவரால் செதுக்கப்பட்ட தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சமூகம் நூற்றாண்டு பிறந்த தின ஆண்டாகப் பிரகடனப்படுத்தி ஏனைய பாடசாலை சமூகங்களை மூத்தோரை பழைய மாணவர்களை இணைத்து பல்வேறு வழிகளில் கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

மகாஜனக் கல்லூரியின் வெள்ளி விழா கண்ட அதிபர் என்ற பெருமையை அமரர் தெ.து. ஜெயரத்தினம் அவர்கள் தந்தை பாவலி துரையப்பாபிள்ளை அவர்களினால் 1910 ஒக்டோபர் 14ல் மகாஜனாக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு சரியாக மூன்று வருடங்கள் கழித்து 1913ல் பிறந்தவர். தந்தையின் கனவுகள் தியாகங்கள் என்பவற்றைக் கண்டு அறிந்து அந்த உணர்விகளில் அமிழ்ந்து வளர்ந்த இவர் இறைவனடி சேரும் வரை மகாஜனாக் கல்லூரியின் வளர்ச்சியிலேயே தன் மூச்சாகக் கொண்டிருந்தார் என்பது பற்றி .தந்தையார் 1929 ல் இறக்கும் போது அவருக்குப் பதினாறு வயது படித்துக் கொண்டிருந்தார்.தந்தையார் அம்பனை கிராமத்திலிருந்து கல்விக்காகத் துடிக் கும் பிள்ளைகளுக்கு என ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையை சிறிய தந்தை கவிஞர் கா. சின்னப்பா அவர்களின் தலைமையில் கட்டிக் காத்து தனது 19வது வயதில் 1932ல் பாடசாலையில் அசிரியராக இணைந்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சைவத்தையும் தமிழையும் காக்கவென அமைந்த ஒரு பாடசாலை அதுவும் அயலில்மிசனரிமாரினால் அமைக்கப்பட்ட ஒரு பாடசாலை வளர்ச்சி பெற்றிருந்த நிலையில் பாடசாலை கட்டிக் காப்பது என்பது நினைத்தே பார்க்க முடியாத காரியம் என்பது மிகையல்ல 1945 ல் அதிபராகி 1970 ல் ஓய்வு பெறும் வரை 25 வருடம் வெள்ளி விழாக் கண்ட அதிபராக மகாஜனா சிற்பியாக கல்லூரியை செதுக்கிய அமரர் தெ.து. ஜெயரத்தினம் அவர்கள் மகாஜனாக் கல்லூரியை நாடெங்கிலுமுள்ள கல்வி மான்களால் கல்வி பெறத் துடிக்கும் இளைய சமுதாயத்தால் அவர் தம் பெற்றொரால் அம்பனை பல்கலைக்கழகம் என பெருமையுடன் அழைக்க வைத்தவர்.

தெற்கிலிருந்து கிழக்கிலிருந்து மலையகத்திலிருந்து அதிக மாணவர்கள் யாழ்ப்பாண நகரப் பாடசாலைகளையெல்லாம் தாண்டி வந்து விடுதியில் தங்கி உயர்தரக் கல்வியை பெற வைத்தவர். அந்நிலை 80களின் முற்பகுதி வரை நீடித்தது என்பது அவர் விட்டுச் சென்ற அடையாளம் என்பது மிகையல்ல.

அவருடைய காலத்தில் மாணவர் ஒழுங்காற்றுகை நிறப்பாகப் பேணப்பட்டது. தாராளமாக தண்டனை வழங்க முடியும் என்ற காலகட் டம் அது.எனவே அதிபர் அவர்கள் மிகக் கண்டிப் பானவர். தனது முழு நீள சேட்டுக்கையினுள் நீளமான பிரம்பு மறைத்து வைக்கப்பட்ட நிலையில் தான் அவர் வகுப்பறை மேற்பார்வைக்கு வருவார்கள் என்பது அவரது மாணவர்கள் இப்போதும் நினைவு கூர்ந்து பழைய நினைவுகளில் சொக்கிப் போவது அனேக பழைய மாணவர்கள் என்னை வந்து சந்திக்கின்ற போது நான் தெரிந்து கொண்டது.

பாடசாலையை அரசு கையேற்கும் போது அவர் விரும்பியிருந்தால் வெற்று நிலத்தில் ஒரு பகுதியை கையிக்காமல் விட்டிருக்கலாம். அக்காலத்தில் பல பாடசாலைகள் அவ்வாறு செய்ததுண்டு அப்படியான அபிப்பிராயத்தை அவரிடம் சிலர் கூறிய போது அதை முற்றாக நிராகரித்தார். அப்போது அவர் கூறிய வார்த்தைகள் இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றாலும் அது தெல்லிப்பளையிலே தான் இருக்கப் கோகிறது.இந்த ஊர் மாணவர்களுக்கே கல்வி புகட்டப் போகிறது. ஆகவே அதன் வளர்ச்சிக்கு நாம் உதவ வேண்டும் என்றால் அத்தகைய பரந்த தெளிவான மனப்பாங்குதான் இன்னும் ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் அவரை வைத்திருக்கிறது. கல்வியில் மட்டுமல்ல பாடசாலையைச் சகல துறைகளிலும் மிளிர வைத்தவர்.1935 ல் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் உதைபந்தாட்ட போட்டியொன்றை அகில இலங்கையில் முதன் முதலாக இரவு வேளையில் மின் ஒளியில் பாடசாலை மைதானத்தில் நடத்தியதுடன் உதைபந்தாட்டம் என்றால் அகில இலங்கையையும் மகாஜனா பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தவர். உதைபந்தாட்ட குழுவில் இருப்பதற்காகவே பாடசாலைக்கு வந்து சேர்ந்த மாணவர்கள் மிக அதிகம்.தமிழ்த் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் அகில இலங்கை ரீதியில் நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற வைத்தவர் என்பது மட்டுமல்ல மிகுந்த ஆங்கிலப் புலமை உள்ளவர் என்பதால் ஆங்கில மொழிப் போட்டிகளிலும் முதன்மை இடத்தைப் பெற வைத்தவர்.

சமயப் பணியிலும் சிறந்து விழங்கியவர் தெல்லிப் பழை துர்க்கா தேவி ஆலயம் இன்று உலகப் புகழ் பெற்று நிற்கின்றது.1950 களில் கேட்பாரற்று கொட்டிலாக இருந்த இவ்வாயம் அதிபரின் தலைமையில் இளைஞர்களின் உதவியுடன் புரனமைக்கப்பட்டது. 1966ம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினராக இணைந்து 1970ம் ஆண்டு முதல் 29.101976 வரை தலைவராக தொழிற்பட்டு ஆலயத்தை வளர்த்தெடுத்து சமயப் பணியிலும் தென் மூலம் சமூகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.அவருடைய நிர்வாக சபையில் அவருக்கு பொருளாளராக இருந்தவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

அவரால் உயர்ந்த மகாஜனாக் கல்லூரி 7 வருட நிரந்தர இடப் பெயர்வின் பின் மீண்டும் மிடுக்குடன் மீண்டும் நிமிர்ந்து நிற்பது அவருடைய



ஆத்மீகப் பலம் தான் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். பாடசாரல அலுவலக அறையில் அவருடய ஓவியம் பின்னால் இருந்து அசி வழங்க அவருடய கதிரை அமர்திருப்பது பொருத்தமானதே அவர் அமர்ந்த ஆசனத்தில் அமரும் பேறு பெற்றவர்கள் பாக்கிய சாலிகள்.

அவருடைய இறுதிச் சடங்கின் போது கல்லூரிக் கீதத்தில் மேலும் இரண்டு வரிகள் கீதம் இயற்றிய புலவர் நா. சிவபாதசுந்தனார் சேர்த்திருந்தார்.

கல்லூரி ஸ்தாபகர் கல்வி கலைஞன்
துரையப்பா புகழ் துதிப்போம் என்ற
அடிகளைத் தொடர்ந்து
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத்தினம் புகழ் துதிப்போம்

இவ்வரிகள் இன்றுவரை கல்லூரிக் கீதத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் பாடவாலையில் ஒளித்துக் கொண்டிருக்கிறது. எம்மை வாழவைத்தவர் என்பது மட்டுமல்ல காலத்தால் அழியாதவர்களும் இது தான் போலும்.

**திருமதி சிவமலர் அனந்தசயன்**
ஓய்வு நிலை அதிபர்,
மகாஜனக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளைப் பழியாது ஒளியை ஏற்றியோர்!

## சிந்தையில் நிற்கும் சிங்கம் மாஸ்டர்



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் புகழ் பூத்த ஆசிரியர்களுள் மிக முக்கியமானவர். பரநிருபசிங்கம் என்பது அவரது பெயர். இருப்பினும் சிங்கம் மாஸ்டர் என்றே பலராலும் அறியப்பட்டவர். சிறந்த கணிதத்துறை ஆசானாக விளங்கிய அவர் சைவசமயத்தின் தத்துவார்த்தங்களை முறையாக உணர்ந்து கொண்ட மெஞ்ஞானத்திறன் மிக்கவராகவும் திகழ்ந்தார். "மௌனத்தவமுனி" என அறியப்படும் அளவெட்டியைச் சேர்ந்த சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதியுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்த இவர், அவர் மூலமாக பல சைவசித்தாந்த விடயங்களை அறிந்து கொண்டார். இருப்பினும் அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதாயின் அதனை நுகரும் தகுதி அவர்களுக்கு இருக்க வேண்டும் எனும் இறுக்கமான கொள்கையைப் பின்பற்றியமையால் அமரரின் மறைவுக்குப் பின்னர் பல விடயங்கள் கிடைக்காமலேயே போய்விட்டன. இருந்தபோதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த சுசீந்திரராஜா அவர்கள் இவர் வாழும் காலத்தில் கைலாசபதியின் சிந்தனைகள் சிலவற்றை புத்தகமாக்கியிருந்தார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையுடனும் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த இவர் தமிழ்த்தேசிய உணர்வுமிக்க அரசியல் சிந்தனையுள்ளவராகவும் அறியப்பட்டவர். தமிழர் விடுதலைப்போராட்ட முன்னோடிகளில் ஒருவரான இறைகுமாரன் இவரது மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஒக்டோபர் 06 ஆசிரியர் தினத்தையொட்டிய நமது முரசொலியின் சிறப்புப் பதிவு

தொகுப்பு: நயனன்

## ஆசிரியர் ஒருவர் அமைச்சராகின்றார்




அண்மையில் நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்ற வெற்றியை அடுத்து வடக்கில் நல்லாட்சி ஒன்றை மாகாணசபை மூலம் நிறுவ எத்தனிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆளுமைகளில் கல்வி அமைச்சருக்குப் பொருத்தமானவர் எனக் கருத்து வேறுபாடின்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதர். ஆசிரியராக ஆரம்பித்த இவரது கல்வித்துறைப் பணி இன்று வடக்கின் கல்வி அமைச்சராக உயர்ந்து நிற்கின்றது.

குருகுலராஜாவின் சேவைக் கால விபரங்கள் கிளிநொச்சி தருமபுரம் ம.வி - ஆசிரியர் (76.11.03- 80.06.22) கல்வி மூலவள நிலையம்- ஆசிரியர்- (80.06.23 - 81.03.15) கிளிநொச்சி தருமபுரம் ம.வி - ஆசிரியர் - (81.03.16 - 84.02.06) கிளிநொச்சி தருமபுரம் ம.வி - உப அதிபர் -(84.02.07 - 87.08.31) கிளிநொச்சி தருமபுரம் ம.வி - அதிபர் -(87.09.01 - 91.04.30) கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம்- கொத்தணி அதிபர் - இலங்கை கல்வி நிர்வாக சேவை III (91.05.01- 92.08.14) கிளிநொச்சி கல்வித் திணைக்களம்-உதவிக் கல்விப்பணிப்பாளர்.- (92.08.15 - 93.07.14) கோட்டக்கல்வி அதிகாரி கண்டாவளை-(93.07.15 - 97.06.30) கிளிநொச்சி கல்வித் திணைக்களம்- பிரதிக் கல்விப் பணிப்பாளர்- இ.க.நி.சே II - (97.07.01 - 98.04.14) முல்லைத்தீவு கல்வித் திணைக்களம் - கல்விப் பணிப்பாளர்- (98.04.15 - 2005.02.28) கிளிநொச்சி கல்வித் திணைக்களம்- கல்விப்பணிப்பளர்-இ.க.நி.சே I -(2005.03.02 - 2011.08.20) ஓய்வு நாள் : 2011.08.20

என்றும் சமூகப் பணியில் இணைத்துக் கொண்ட குருகுலராஜா, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டத் தலைவராகக் கடமையாற்றி போர்க்காலங்களில் மக்களுக்கு பெரும் சேவையாற்றி இருந்ததுடன் காணான் சிறுவர் இல்லத்தின் நிர்வாகியாக இருந்து பல ஆதரவற்ற சிறுவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவரும் ஆவார். இவரது தந்தையார் பெயரில் தம்பிராசபுரம் என ஒரு கிராமம் கண்டாவளைப்பகுதியில் அமைந்துள்ளமை இவரது குடும்பத்தின் சமூகச் செல்வாக்குக்கு ஆதாரமாகும். அவரின் வழிகாட்டலில், வடக்கின் கல்வி நிலை தலைநிமிர நமது முரசொலியின் வாழ்த்துக்கள்..

## ஊன்றுகோலொன்று ஏணியானது பேரோசான் சிவராமலிங்கம்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் வரலாற்றில் நினைந்து போற்றப்படும் ஆசிரியர்களுள் மிக முக்கியமானவர். புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு-செய்து ஆசிரியப்பணியில் இணைந்து கொண்டவர். பணிநிறைவின் போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் பொறுப்பினை வகித்து ஓய்வுபெற்றவர். இளமையிலேயே பக்கவாத நோயினால் பாதிப்புற்ற இவர் சோர்வுற்று படுக்கையில் விழாது ஊன்றுகோலின் பலத்துடனும் முச்சக்கரவண்டியின் துணையுடனும் நிமிர்ந்து நின்று கல்விப்பணி ஆற்றியவர். சிறந்த தமிழ் மொழிப் புலமையும் ஆங்கிலப் பரீட்சயமும் கொண்ட இவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் இன்று உலகின் பல்வேறு பாகங்களிலும் சிறப்பான பதவிகளில் இடம் கொள்கின்றனர். சிறந்த பேச்சாளரான இவரினால் தாபிக்கப்பட்ட அமைப்பே இன்று வளர்ந்து பெருவிருட்சமாக நிற்கும் "அகில இலங்கை கம்பன் கழகம்" எனும் கலைத்துவ அமைப்பாகும். இவரது புலமை, சமூக நோக்கு என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தேகவியோகநிலையில் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கருணைப் பாலம் அமைத்த காருண்யன் ஆ.சி.நடராஜா



அண்மைக்கால ஆசிரிய ஆளுமைகளில் அதிகம் கவனம் கொடுக்கப்பட்ட ஒரு மனிதர் ஆ.சி. நடராஜா. குரும்பசிட்டியைச் சேர்ந்த இவர் ஓர் ஆசிரியராக, அதிபராக ஆற்றிய சேவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் விளங்குவது தினக்குரல் முகாமையாளராக இருந்த போது அமைத்த கருணைப் பாலமே. போர் தின்றுமிழ்ந்த எங்கள் தமிழ் உறவுகளின் துயர் துடைக்க உடன் துணிந்தவர் ஆ.சி.நடராஜா. எவரையும் எதிர்பாராது, யாரிடமும் நேர்செல்லாது தன்சிந்தையிற் தோன்றியதை தன்னிடமிருந்த ஊடகப்பலத்தைக் கொண்டு சாதனையாக்கிக் காட்டியவர். கருணைப் பாலத்தின் வீச்சு இன்று வன்னிப்பிராந்தியம் எங்கும் கை கொடுத்து நிற்கின்றது. திசையெங்கும் சிதறிய உறவுகளுக்குக் கரம் நீட்ட எண்ணிய தமிழ்ச் சோதரர்கள் செல்லும் திசை தெரியாது நின்ற போது அவர்களுக்கு வழிகாட்டியானவர். வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபராக அவர் இருந்த காலப்பகுதி கல்லூரி பல இடர்களைத் தாண்டி நிமிர்ந்த நேரம் ஆகும். இடப்பெயர்வும், வளப்பற்றாக்குறையும் விடாது துரத்தியபோதும் தளராது தன்முயற்சியால் கல்லூரியை வெற்றிப் பாதையில் நகர்த்தியவர். வலிகாமம் வடக்கின் வளமிக்க பூமியை போர்க்கரங்கள் சூழ்ந்து உயர்பாதுகாப்பு வலயமென கபளீகரம் செய்த போது, அதற்காய் தயங்காது குரல் கொடுத்தவர். இடம்பெயர்ந்தோர் அமைப்பொன்றை நிறுவி அதன் தலைவராகி இயன்றவரை மண்மீட்க உழைத்த மனிதன். ஆ.சி எனும் அவரின் முதலெழுத்துக்களை அவரை அறிந்தோர் "ஆக்கத்தின் சித்தி" என அழைத்து அகமகிழ்வதுண்டு. உறுநோய் தொடர்ந்தபோதும் தான்தொட்ட பணிகளில் தடையேதும் ஏற்படக்கூடாதெனும் உயர் சிந்தனையில் மற்றவர் துயர் தாங்கியவர். ஏழை மாணவர்களின் கல்விக்கு ஏணியாகி நின்றவர். அவர்நினைவேந்தும் மாணவர் சமூகம் உலகின் பலதிசையும் பரவியிருப்பது அவரின் பெருமைக்கும் உயர்பணிக்கும் சான்றாகும். "ஆசிநன்", "யாழரசன்" எனும் புனைபெயர்களில் பத்திரிகை பத்திகளை எழுதிய ஊடகவியளாளன். தன் தடம் தொடர பலரை உருவாக்கிவிட்ட ஊடகக் குரு.

## காலத்தை மாற்றி நினைத்த கம்யூனிஸ்ட் காத்திகேயன்



யாழ். குடாநாட்டின் அரசியல், கல்வி, கலை கலாசாரத் துறைகளில் 1944 ஆம் ஆண்டு தொடக்கம் 1977 ஆண்டுவரை தனக்கென ஓர் முத்திரையைப் பதித்தவரும், இத்துறைகளின் முன்னேற்றங்களில் மிகவும் ஈடுபாடுகொண்டு, அவற்றை முன்னெடுத்துச் சென்ற அறிஞர்களுள், காலஞ்சென்ற மு.கார்த்திகேசன் ஒரு தனியிடத்தைப் பெற்றவராவார். அவர் இறந்து 31 ஆண்டுகள் கடந்துவிட்டன. அவர் அரசியலுக்காக கம்யூனிஸ்ட் கட்சியையும், கல்விக்காக ஆசிரியத் தொழிலையும், கலை, கலாசாரத்திற்காக அவர் வாழ்ந்த வண்ணார் பண்ணைப் பகுதியிலுள்ள சமூக நிறுவனங்களின் ஈடுபாட்டையும், மாநகரசபை வரியிறுப்போர் சங்க உறுப்புரிமைக்காக யாழ். மாநகரசபை அங்கத்துவப் பதவியையும் பயன்படுத்தினார். சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இவர் தனது முழுக்கவனத்தைக் காலநேரம் பாராது, சாதி, சமயம் பாராது, பிரதிபலன் நோக்காது செலுத்தியமைக்கான ஒரேயொரு காரணமென்னவெனில், அவர் ஒப்பற்ற, உன்னதமான சமூகப் பங்காளனாகச் சமூகத்தை நேசித்த தலைசிறந்த வழிகாட்டியாக விளங்கியமையினாலாகும். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை யாழ். மாவட்டத்தில் ஸ்தாபித்து, அதன் சித்தாந்தத்தை அன்றைய காலகட்டத்தில் இங்கு வேரூன்ற வழிவகுத்த சிறந்த போதனாசிரியர். இவர் இலங்கைக் கம்யூனிஸ்ட்டுகளின் பரம்பரையில் முதற் பரம்பரையைச் சேர்ந்தவராவா வார். யாழ்.இந்துக் கல்லூரியில் 1946 இலிருந்து 1971 மே மாதம் வரை சேவை செய்தார். இதில் 1971 ஜனவரி தொடக்கம் அவ்வாண்டு மே மாதம் வரை அதிபராகக் கடமையாற்றி னார். யாழ். பல்கலைக்கழக வளாகம் ஆரம்பித்தபோது அதன் தலைவராகவும், பின்னர் பல்கலைக்கழகம் பல மாடிக் கட்டிடமாகப் பரிணமித்தபோது அதன் உபவேந்தராகவும் விளங்கிய பேராசிரியர் கைலாசபதி இவரின் மாணவர் என்பது பெருமைக்குரியது




## உலக உளவளத் துணை நாள் - 2013




உலக உளவளத் துணை நாள் உலகம் முழுவதும் ஒக்ரோபர் 10ம் நாள் கடைப்பிடிக்கபட்டு வருகின்றது. உலக சுகாதாரத் ஸ்தாபனம் இத் தினத்தை அர்த்தம் மிக்கதாகவும், விழிப்புணர்வு மிக்கதாகவும் மாற்றுவதில் அதிக கவனம் எடுத்துச் செயற்பட்டு வருகின்றது. உளவளத் துணை தொடர்பில் ஒவ்வொரு நாட்டினதும் சுகாதாரத்துறை அமைச்சுக்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நெருங்கிய உறவொன்றை ஏற்படுத்துவதே உலக சுகாதார ஸ்தாபனத்தின் குறிக்கோளாகும். 2013ம் ஆண்டு உலக உளவளத்துணை நாள் "உள சுகாதாரமும் முதியவர்களும்" எனும் கருப்பொருளில் நினைவு கூரப்படுகிறது. போர் தின்று போட்ட எமது மண்ணில்

உலக உளவளத் துணை நாள் உலகம் முழுவதும் ஒக்ரோபர் 10ம் நாள் கடைப்பிடிக்கபட்டு வருகின்றது. உலக சுகாதாரத் ஸ்தாபனம் இத் தினத்தை அர்த்தம் மிக்கதாகவும், விழிப்புணர்வு மிக்கதாகவும் மாற்றுவதில் அதிக கவனம் எடுத்துச் செயற்பட்டு வருகின்றது. உளவளத் துணை தொடர்பில் ஒவ்வொரு நாட்டினதும் சுகாதாரத்துறை அமைச்சுக்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நெருங்கிய உறவொன்றை ஏற்படுத்துவதே உலக சுகாதார ஸ்தாபனத்தின் குறிக்கோளாகும். 2013ம் ஆண்டு உலக உளவளத்துணை நாள் "உள சுகாதாரமும் முதியவர்களும்" எனும் கருப்பொருளில் நினைவு கூரப்படுகிறது. போர் தின்று போட்ட எமது மண்ணில் கண்ணுக்கு முன் உறவுகளைத் தொலைத்தும் கையளித்த உறவுகளை எப்போது இனி மீளக் காண்போம் எனும் ஏக்கத்திலும், பெற்றோரைப் பிரிந்த துயரத்திலும் வாழும் உறவுகள் ஏராளம். அவர்கள் அத்தனை பேரினதும் இன்றைய தேவை உள அமைதியே. ஆனால் ஆறாத காயங்களை ஆற்றுப்படுத்துவதற்கான ஆறுதல்தரும் திட்டங்களுக்கு இன்னமும் இப்பிராந்தியங்களில் அனுமதி இல்லை இது குறித்துப் பேசவேண்டியது துறைசார்ந்த அனைவரினதும் பொறுப்பாகும். அதற்கான [illegible]ள்ளாது வெறுமனே பெயரளவில் உளநாளைக் கொண்டாடுவதென்பது [illegible] தரப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் குறுக்குத்தெரு, மணிப்புரியைச் சேர்ந்த யூட் பிறைனர் அன்ரன் [illegible] நசித்குமார் அவர்களால் 04.10.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.